17

சகல நாடகக் கம்பெனியார்களும்

பாடி நடித்துவரும்

# அல்லி - அர்ஜ

ச. க. சங்கரலிங்கக் கவிராயரவர்களின் மாணவர்



மதுரை: K. குற்றாலம்பி

சென்னை:

B. இரத்தின நாயகர் ஸன்ஸ் பதிப்பு.

1932. [விலை 0-4-0.

O-, 2mKP,A
N32
48053

ஸ்ரீ

ஸ்ரீ கிருஷ்ணாய நம:

K. S. செல்லப்பா அய்யர், K. S. அனந்தநாராயண அய்யர்,

S. G. கிட்டப்பா, K. B. சுந்தராம்பாள்,

P. S. வேலுநாயர், S. R. கமலம்,

மதுரை ஒரிஜினல் பாய்ஸ் கம்பெனி,

ஸ்ரீ பால விநோத நாடக சபா

இவர்களால் நடத்திவரும்

# அல்லி - அர்ஜுனா

உடுமலை ஸ்ரீமான் சரபகவி மாணவரும்

சென்னை, ஸ்ரீ பாலவிநோத நாடக சபாவின் ஆசிரியருமான

ச. சு. சங்கரலிங்கக் கவிராயரவர்களின் மாணவர்

முத்தமிழ் க்ஷேத்திர மதுரை

**K. குற்றாலம்பிள்ளை அவர்களால்**

இயற்றியது

**B. இரத்தின நாயகர் ஸன்ஸ்,**

திருமகள்விலாச அச்சியந்திரசாலை,

சென்னை.

ரிஜிஸ்டர் காபிரைட்] 1932 [விலை அணா 4.

10 AUG 1932

O-,2MKP,A
N32

68053

2693
894'8112

# ஆக்கியோன் வாக்கியம்

ஆழியையே ஆடையாகப் போர்த்திராநின்ற இஞ்ஞாலமிசை, கதிரவன்போற் பலவகையிலும் மிளிரும், நாம் வாழ் இந்நாவலந்தீவில் சில நூற்றாண்டுகட்குமுன் வெண்பா யாப்பு இயற்றுவதில் மிக்க வல்லுனரான புகழேந்திப் புலவர் இருந்தது கரதலாமலகம். அவர் வினைவயத்தால், ஒட்டக்கூத்தர் சூழ்ச்சியின் காரணமாய் சிறைக் கோட்டம் உறைந்த காலை அவரால் ஆக்கப்பெற்ற கற்பனைக் காதைகளில் பலவற்றுள் ஒன்றாயது இவ் வல்லிராணி சரித்திரம். இதனை நாடகவியலாய் தீர்த்துப் பலவாண்டுகளாகப் பற்பல வித்வசிரோன்மணிகளால் நாடகம் நடாத்தி வருகின்றனர். இந்நாடகம் நவரசங்களும் ஒருங்கே அமையப்பெற்று சிறப்புற நாடக உலகில் திகழ்வதும் யாம் கூறாமலே விளங்கும்; இத்துணை ஆற்றல் வாய்ந்த இவ் வல்லிராணி நாடகத்தை அநேகர் இயற்றியிருப்பினும் யாம் இது காலை யாத்துவரும் நாடகக் கோர்வையில் இதனையும் ஒன்றாகச் சேர்த்து எம்மால் இயன்றவரை சொல் நயம்; பொருள் நயம்; கற்பனா அலங்காரம்; கவிநயம் முதலிய பல நயங்கள் பொருந்த அமைத்து உள்ளேன்; ஆனால், சில நூலாசிரியர்கள் கரைபுரண்ட வெள்ளம் கட்டுக்கடங்காது வீரிட்டு ஓடுவதை ஒத்து கற்பனைப் பொங்கிவழிய பன் நலன்களை அமைத்து, கண்டோர் மனம் களிப்பெய்த இயற்றும் ஆற்றல் இன்றெனினும் பாலோடு சேர்ந்த நீரும் பால் தன்மையடைவதே போன்று ஆன்றோர் குற்றம் கடிந்து எம்மை ஆதரிக்க வேண்டுகின்றனம்.

இங்ஙனம், அன்பன்:

மதுரை K. குற்றாலம் பிள்ளை.

Copy Right and Rights of Translation in any other Languages, strictly reserved by the Publishers.

## நாடகப் பாத்திரங்கள்:

| | | |
|---|---|---|
| 1 | அல்லிராணி | மதுரைராணி |
| 2 | பவளசேனு | முதல் மந்திரி |
| 3 | செங்கமலம் | இரண்டாவது மந்திரி |
| 4 | தோழிகள் | அல்லியின் ஏவலாள் |
| 5 | அர்ச்சுனன் | பாண்டுவின் புத்திரன் |
| 6 | கிருஷ்ணன் | துவாரகை அரசன் |
| 7 | முத்துவணிகஞ் செட்டி | ஒரு முத்து வியாபாரி |
| 8 | பாம்புப் பிடாரன் | கிருஷ்ணனுடைய மாறு வேடங்கள் |
| 9 | குறத்தி | |
| 10 | மெல்லி | |
| 11 | கிழபிராமணன் மனைவி | |
| 12 | வீமன் | பாண்டுவின் புத்திரர்கள் |
| 13 | தருமன் | |
| 14 | சகாதேவன் | |

கதை நிகழ்ந்த இடம்:

மதுரைமாநகரம்.

ஸ்ரீ

ஸ்ரீ கிருஷ்ணாய நமः

சகல நாடகக் கம்பெனியாராலும் நடத்திவரும்

புதிய நூதன பார்ஸி

# அல்லி-அர்ஜுனா

வெண்பா

ஆதிமூலப் பேருளே ஐங்கரனே உன்பாதம்
நீதியுடன் நான்பணிந்தேன் நியாயகனே-சோதிமறை
வெற்றி யுடனுண்ட வீரவல்லி தன்கதையை
பற்றி யுடன்பாடி னேனே.

பொது வசனம்

அந்தணர்களின் உதவிக்காக தனது வில்லை எடுக்கச் செல்லுங்கால் தருமரும் துரோபதையும் உல்லாசமாய் இருந்ததைக் கண்ணுற்ற அர்ச்சுனன் ஷடி தோஷபரிகாரம் நிவர்த்தியாகும்படி நாரத முனிவரின் கட்டளையின்படி தன் சகோதரர்களிடத்தில் விடை பெற்றுக்கொண்டு தன் மைத்துனனுகிய கிருஷ்ணனை அழைத்துக்கொண்டு தீர்த்த யாத்திரை சொல்லுகிறுன்.

சீன்-1. இடம்-இந்திரபிரஸ்தம்.

பாத்திரங்கள்-அர்ச்சுனன், கிருஷ்ணன்

அர்ச்சுனன் தரு

இராகம்-மத்தியமாவதி, தாளம்-ரூபகம்.

பல்லவி

பாதம் பணிந்தே னய்யனே-உனது
பதமல ரனுதினம்
போற்றினே னித்தினம் (பா)

அநுபல்லவி

ஈசா கைலைவாழும் வாசா சர்வேசா
தேசா-பாவலர்-பவ நாசா-பணிந்தேன் பரமே-உனது
பதமலரனுதினம் போற்றினே னித்தினம் (பா)

அர். வ-ம்:-யான் தீர்த்தயாத்திரை செல்வதற்குத் துணையாக எனது மைத்துனனுகிய கண்ணபிரானையும் அழைத்துச் செல்வேன்.

[அர்ச்சுனன் கிருஷ்ணனைத் தியானம் செய்தல்]

## அர்ச்சுனன் தரு கண்ணிகள்

(தினந்துதிப்பாய் நெஞ்சே என்ற மெட்டு)

கரங்குவித்தேன் கண்ணா கருணைசெய் மணிவண்ணா
கருணைசெய் மணிவண்ணா தருணமே கமலக்கண்ணா (கர)

ஏழைக்கிரங்கி மனம் இதுததிவாராய் தினம்
இதுததிவாராய் தினம் ததியிதுகாராய் தினம் (கர)

அர் வ-ம்:—கமலக்கண்ணா காண்டீபனுக்காக விரைந்துவரும்படி பிரார்த்திக்கின்றேன் பரந்தாமா.

கிரு. வ-ம்:—காண்டீபா! அஞ்சாதே வந்தேன்.

அர். வ-ம்:—கோபாலா! நமஸ்காரம்; நான் தீர்த்தயாத்திரை செய்ய உத்தேசித்திருந்த விஷயம் தமக்குத் தெரியுமாதலால், துணை யாக வரும்படி அழைத்தேன்.

கிரு:—நல்லது; மைத்துனா! அப்படியே செல்வோம்.

[இருவரும் போகின்றார்கள்]

சீன்-2. இடம்—மதுரைமாநகரம்.

பாத்திரங்கள்:—கிருஷ்ணன், அர்ச்சுனன், முத்து வணிகன்.

கிரு. வ-ம்:—காண்டீபா! தாம் இதுநாள் வரை அநேக புண்ணிய க்ஷேத்திரங்களில் சென்று தீர்த்தயாத்திரை செய்து திருவா லவாயம்பதி என்னும் மதுரைமாநகர் வந்துள்ளோம். இங்கு எழுந் தருளியிருக்கும் ஸ்ரீ மீனாக்ஷி சுந்தரேசரைத் தெரிசனம் செய்து விட்டு நமது இருப்பிடம் செல்லலாம் வா.

அர். வ-ம்:—பரந்தாமா! நல்லது; அவ்வாறே செய்யலாம்.

[இருவரும் ஏகும் வழியில் முத்துவணிகன் புலம்பிக்கொண் டிருப்பதை அர்ச்சுனன் கவனிக்கின்றான்.]

(வங்கார மார்பிலணி என்ற மெட்டு)

செ. மதுரைதனையாளுமல்லி மாதிதையேதானறிந்தால்
அதஞ்செய்து ஆக்கினைகள் எனக்குமிகத்தான்புரிவாள்
இதமான வேளைதனில் எனக்கருள் புரியநீயும் வருவாயே(ம)

எந்நாளுங் குறையாது கலமுத்துத் தானளந்தேன்
இந்நாளில் மழையில்லா ததலினால்படி முத்துத்தான்குறைய
சொன்னக்கால் ராணியல்லி என்னசெய்குவாளோ தெரியேன்
[பரந்தாமா (ம)

பூர்வீகக் கர்மவினை சூழ்ந்ததுவோ நானறியேன்
தார்குழலா ளல்லியினுல் தலைபோக விதிவசமோ
யாருதவி புரிகுவாரோ இவ்வேளை என துயிர்க்குக்காணேனே

செ. வ-ம்:—ஏ மீனம்பிகை சமேதா! ஒருநாளுங் குறையாத முத்து இன்று அளவில் ஒருபடி குறைந்துவிட்டதே. இதை அல்லி ராணி அறிந்தால் என்ன ஆக்கினை செய்வாளோ! என் மனது துடிக்கின்றதே. சோமசுந்தரா! எல்லாவற்றிற்கும் நீதான் துணை:

அர். வ-ம்:—பரந்தாமா! என்ன இது யாரோ ஒருவன் அதிக விசன முற்று செல்லும் வழியி லபசகுனம்போல் அழுதுகொண்டிருக் கின்றுன். யார் என்று சவனித்துப் போவோம் வா.

கிரு. வ-ம்:—அர்ச்சுனு! யார் எக்கேடு கெட்டால் நமக்கென்ன. நாம் வந்த வேலை என்ன? அதைக் கவனித்துக்கொண்டு சீக்கிரம் நமது நகருக் கேகலாம் வருவாய்.

அர். வ-ம்:—கோபாலா என்ன வேலையாக வந்தபோதிலும் ஒருவன் துயரப்படுவதைக் காதில் கேட்டுவிட்டு எவ்வாறு வினவாது செல்வது. இது நம்மைப்போன்றவர்களுக்கு அழகல்ல.

கிரு. வ-ம்:—நல்லது; உனதிஷ்டப்படியே செய்.

## அர்ச்சுனன் விருத்தம் (தோடி)

ஏனப்பா நீதான்மெத்த அலறியேதுடிக்கின்றுயே
தானப்பா எந்தவூரு தவிக்குமோர் விஷயமென்ன
கூறப்பா உனக்குநேர்ந்த கொடுந்துயரெந்தன்முன்னே
பாரப்பா நிறைவுசெய்வேன் பகருவாய் வாய்திறந்தே.

## தரு

(இப்படிப் புலம்புவதுமேன் என்றமெட்டு)

இராகம்-இந்துஸ்தான்தோடி, தாளம்-ஏகம்.

பல்லவி

இப்படித் துயருருவானேன்—உனக்
கிந்தவித மானகஷ்டம் வந்ததேதோயிவ் வேளைநஷ்டம் (இப்)

அநுபல்லவி

குற்றம் யார்க்கோவிளைத்துக் கொடுந்துயரதைநினைத்து
நிற்கலா னீரோதிகைத்து இபம்புவீ ரேமைக்கெடுத்து (இப்)

சரணம்

அல்லியல்லி யென்று பெண்ணின்
பெயரைச்சொல்லி நின்று கண்ணில்
கலங்குதே ஜலமும் முன்னில்
துலங்க விளங்க—எனக்கியம்பிடும் (இப்)

அச்சம்வேண்டா மெங்கள் முன்னே
நிச்சமா யுமக்குப்பின்னே
இக்ஷணமே செய்வேன் சொன்னேன்
இயக்க மிகுத்து—திகைத்துநினைத்து (இப்)

அர். வ-ம்:—ஐயா! உம்மைப் பார்க்கும்பொழுது பிணிவா யகப்பட்டவர்போல் தோன்றவில்லை. ஏதோ மனச் சஞ்சலத்தினல் துன்புருகிறீரென்று தெரியவருகின்றது; ஆனதினல், எந்த விஷயமானுலும் கள்ளமின்றிச் சொல்லும். என்னல், இயன்றசகாயம் செய்கின்றேன்.

செட். வ-ம்:—உண்மையாகச் செய்வீரா?

அர். வ-ம்:—கட்டாயம் உண்மையாகச் செய்கின்றேன் சொல்லும்.

செட். வ-ம்:—ஐயா! சொல்லுகின்றேன் கவனியுங்கள்.

(அள்ளியள்ளி நீர்குடிக்கும் என்ற மெட்டு)

கண்ணிகள்

மதுரைநகரில்வாழும் அம்பிகையருள் கண்டு
அல்லியென்றோராணியுமுண்டு அவள் பெண்டு
அவளாண்மைமிகுத்து தேர்ந்தசமர்த்து
அழகிலேமதிரதியை நிகர்த்தும் (மது)

சேயிழைசிகைபோநல்ல ஈராறுபாகமாம்
செல்லுவாளிந்திரலோகமாம் அலங்காரமாம்
அவளழகைச்செப்பவே ஆதிசேடனுலும்
போதாதுஎனது நாவுங்கூசுது (ம)

ஆண்வாடையாகாதென்று ஆங்காரக்காரியாம்
ரீங்காரஞ்செய்யும்-நாரியாம் ஒய்யாரியாம்-தினங்
கலமுத்தளப்பேன் படிமுத்துக்குறை
கலங்குதென்மனம் குறையிதிங்கனம் (ம)

செட். வ-ம்:—ஐயா! எனதிருப்பிடம் மதுரைநகர். நான் ஒரு முத்து வியாபாரி என்பெயர் முத்துவணிகஞ்செட்டி இம்மதுரைமாநகரை யரசுபுரியும் அல்லிராணிக்கு நாள்தோறும் கலமுத்துக் கொடுப்பது வழக்கம் இன்றைக்கு ஒருபடி முத்துக் குறைந்து

போனது குறைந்தவிஷயம் அந்த ராணிஅம்மாளுக்குத் தெரிந்தால் எனதுசிரம் போய்விடும். இக்குறையை நிவர்த்தி செய்ய வேண்டும் பிரபு!

அர். வ-ம்:—செட்டியாரே! நீர் யாதொன்றுக்கு மஞ்சவேண்டாம். அம் மாதுக்கு விவாகம் முடிந்துவிட்டதா?

செட். வ-ம்:—ஆண்வாடையே கிட்டவந்தாலு மாகாது என்று சொன்னேனே.

அர். வ-ம்:—நல்லது; இப்பொழுது உமது குறை என்ன?

செ. வ-ம்:—ஐயா! இன்று ஒருபடி முத்துக் குறைவானதை நிவர்த்தி செய்ய வேண்டும்.

அர். வ-ம்:—மைத்துனா! தயைசெய்து இச் செட்டியாருக்குக் குறையும் ஒருபடி முத்தை நிறையும்படி கிருபாவிக்க வேண்டும்.

கிரு. வ-ம்:—நல்லது; அப்படியே பூர்த்தி செய்தேன்.

அர். வ-ம்:—செட்டியாரே இப்பொழுது பாரும்.

செ. வ-ம்:—(மூட்டையை தூக்கிப்பார்த்து) ஆஹா! என்னமகிமை, என்ன ஆச்சர்யம்! அப்பா, என்ன பளுவாயிருக்கின்றது. கடவுளே இந்த உருவெடுத்து வந்து உதவி செய்தனரோ. என் தலை தப்பினது தம்பிரான் புண்ணியம். எல்லாம் சொக்கநாதன் செயல். ஐயா! நமஸ்காரம் போய் வருகின்றேன்.

அர். வ-ம்:—நல்லது; செட்டியாரே சென்றுவாரும். (கிருஷ்ணனைப் பார்த்து) மைத்துனா என்ன புதுமை. மதுரைமாநகரில் இதுவுமொரு திருவிளையாடலா?

## அர்ச்சுனன் தரு

(வலைதப்பிய குறமான்களே என்ற மெட்டு)

இராகம்-நாதநாமக்கிரியை, தாளம்-ஆதி.

பல்லவி

மைத்துனா இதுவென்ன புதுமையே-இந்த
மாநிலமாள்வது மருமையே
மனமும் துடிக்குது சினமுமுண்டாகுது
சிதறிவிருதறுத்துச் செய்வோமே ஆக்கினை (மை)

ஆண்பிள்ளை யென்றாலே     ஆகாதாம்-வந்தால்
அவள்சினம் விரைவினில்     போகாதாம்
சாண்பிள்ளையானாலும்     ஆண்பிள்ளை-மேலல்லோ
சரசமறியாளைச்     சற்றே-பார்க்கவேணும் (மை)

மதுரையில்-கொடிகட்டி     வாழ்வாளாம்-இந்த
மாநிலமுழுதர     சாள்வாளாம்
புதுமையாம் நம்மையும்     மதியாமலிருந்துமே
நாடரசாண்டிடும்     நாரிக்குக்-கெர்வமேன் (மை)

நமக்குப் பரிகாச     மாகுமே-இந்த
நாரியைவிட்டால்     மானம்போகுமே
நங்கையாளாவிந்த     நானிலமாள்வது
நாமோ-இவளுக்கு     மணிமுடி தாழ்வது (மை)

அர். வ-ம்:—பரந்தாமா! செந்தாமரைக்கண்ணா! இதென்ன புதுமை எத்தனையோ ஆண்பிள்ளைச் சிங்கங்கள் ராஜர்களாக இருக்க கேவலம் ஒரு பெண்பிள்ளை என்ன சாமர்த்தியம் பொருந்தியவளாக இருந்தாலும் இப்பெருமை தங்கிய திருவாலவாய் நகரை அடக்கி ஒரு குடைக்கீழ் அரசாள்வதும், ஆண்வாடையே கூடாது என்று கெர்வங்கொண் டிருப்பதையுங் கண்ணுற்ற நாம் இவளை நேரில் பார்க்காமல் போவது என்றால் நாமே பெரிய அபலைகளாவோம் தங்களபிப்பிராய மெப்படி?

## கிருஷ்ணன் தரு

(அவள்எப்படி யிருந்தால் என்ற மெட்டு)

இராகம்-தர்ப்பார், தாளம்-ஆதி.

பல்லவி

* எந்தவிதமிருந்தால்     நமக்கென்ன—நாம்
நாடிவந்த-காரியத்தைத்     தேடியே-முடித்துச்செல்வோம் (எந்)

அநுபல்லவி

புலம்பியே-புரண்டழுதோன்     புகன்றபடி தானே-அல்லி
புவியரசாள்வதினால்     புகலவுங்-குற்றமில்லை (எந்)

கிரு. வ-ப்:—காண்டீபா! தீர்த்தயாத்திரை செய்ய வந்தோமேயன்றி, இந்த ஊர் அரசாக்ஷியைப்பற்றிக் கவனிக்க வரவில்லை. யார் எப்படி இருந்தாலும் நமக்கென்ன. அம்மாது அவர்களின் முன்னோர்களின் ராஜ்யத்தை அரசுபுரிந்தால் இது குற்றமாகாது? இருந்தாலும் அதைப்பற்றி நாம் ஏன் கவனிக்கவேண்டும்?

---

* இப் பல்லவியுடன்: அல்லி, மாது, மங்கை, அவள் என்ற வார்த்தைகளைச் சேர்த்துப் பாடவும்.

சரணம்

பரம்பரையாய்ப்-பாண்டியர்க ளாண்டுவந்ததேசத்தையே
மாதுமரசாக்ஷி செய்யக்கண்டாய்-அது
வரம்பேயல்லாமல்நமது வார்த்தைக்குவரவில்லையே
மாது மீது ஏனோ சினங்கொண்டாய்

கிரு. வ-ப்:—எதற்காகச் சினங்கொண்டாய் இம் மதுரை மாநகரைப் பரிபாலித்துவந்த பாண்டியர்களுக்குச் சேயனில்லாத காரணத்தினால் தன் புதல்வியாகிய அல்லிஎன் னும்பெண் ணுக்கு மகுடாபிஷேகம் செய்தார்கள். இருந்தாலும், பெண்கள் ராஜ்பபரிபாலனஞ் செய்யக் கூடாதா? எதற்காக இம்மாதிரி தப்பிதமான வார்த்தையைப் புகல்கின்ருய்? சொல்லு.

அர். வ-ப்:—மைத்துனு! எந்தவிதமான பொருமையுமில்லை. ஆண்வாடையே கூடாதுஎன்ருல், அப்படிப்பட்ட அதிதீர வீரமான பெண்மணியை நான் கண்ணுர நேரில் பார்க்காமல் உன்னுடன் வரவேமாட்டேன் இது சத்தியம்.

கிரு. வ-ம்:—அர்ச்சுனு! அவளைப்பார்ப்பது கஷ்டம் பார்த்துவிட்ட பிறகாவது வந்து விடுவாயோ?

அர். வ-ம்:—சந்தேகமில்லை! வருகின்றேன் தடை இல்லை.

கிரு:—காண்டீபா! அம்மாதரசியைப்பார்க்க என் கஷ்டமென்ருல்,

(நம்பிக்கைகொண் டெல்லோரும் என்ற மெட்டு)

பல்லவி

ஆசாரவாசலி லலங்காரமாதைக்
காணலாகுமோ-காணலாகுமோ காண்டீபாநேருமோ (ஆசா)

அநுபல்லவி

ரதகஜதுரபதி கடந்து-நற்
காலாட்படைகளும் சூழ்ந்து
இருக்குங்காவலை மீறியே
கடந்துமே-அல்லியைக் காணலாகுமோ (ஆ)

கிரு:—அர்ச்சுனு! ரதகஜ துரகபதாதிகள் சூழ்ந்துள்ள பெருங் காவலையும் கடந்து கோட்டைக்குள்ளிருக்கும் அல்லியைப்பார்ப்பது கஷ்டம். அம்மாதைப் பார்க்கவேண்டுமானுல், இப்போது விலங்கினங்களை உண்டாக்கிப் பயிர்களை அழிக்கச் செய்கின்றேன் குடிகளின் குறையை நீக்க கானில் வேட்டையாட வருவாள் உடனே பார்த்துவிட்டு வந்துவிட வேண்டும்.

அர். வ-ம்:—அப்படியே ஆகட்டும்.

சீன்-3. இடம்-அல்லியின் அரண்மனை.

பாத்திரங்கள்-அல்லி, தோழிகள்

(எனது குரு மொழி)

## அல்லிராணி தர்ப்பார்-சபைக்கு வருதல்

(ஸ்ரீராமுபாதமு என்ற மெட்டு)

பல்லவி

ஆனந்தக் காக்ஷியே அருள்செய் மீனாக்ஷியே
அதிமதுரித மாக்ஷியே (ஆ)

அநுபல்லவி

ஞானந்தவாரி நன்மதுராபுரி
நாகரீக யோக சொக்க லிங்கன் மகிழ்பாரி (ஆ)

சரணம்

ஏனிந்தவாது என்மேலிப்போது
ஏழைநான்பாராய் இதுததிவாராய்
தானவிலாசி தாய்மகராசி
சங்கரலிங்கன் தமிழ்க் கிரங்குஞ்சுப்ரகாசி (ஆ)

[சேடிகள் வணங்குதல்]

(அணையஜாலமினி என்ற மெட்டு)

சே. வந்தனம் வந்தனம் வந்தனம் தந்தோம்
வந்தனம் தந்தோமே சிந்தை மகிழ்ந்தே

அல். அமருவீர் அமருவீர் அன்பான தோழிகாள்
அமருவீர் என்னிடம் பகருவீர் ஞாயம்

அல்:—மந்திரிகாள் திருவாலவாயெனும் மதுரையம்பதியை ஸ்ரீ மீனாம்பிகை சுந்தரேஸ்வரர் கடாக்ஷத்தினால் யாதொரு குறைவின்றி நாம் செங்கோல் நடாத்தி வருகின்றபடியால் நமது வழிபடுங் கடவுளாகிய ஸ்ரீ மீனாம்பிகையை வணங்குவோம் வாருங்கள்.

மங்:—அப்படியே வணங்குவோம்.

[அனைவோரும் எழுந்து வணங்குகின்றார்கள்]

## தெய்வ வணக்கம்

(சர்வலோக சாக்ஷியே-தாயே மீனாக்ஷியே-என்றமெட்டு)

பல்லவி

அம்பிகாகண்-காக்ஷியே நம்பினேன்-மீனாக்ஷியே
அம்பிகா-நம்பினேன் மாக்ஷி-மாக்ஷியே (அ)

அநுபல்லவி

அநுதினமு-முன தடியின் பதமலரை-யான்பணிந்தேன்
அம்பிகா-நம்பினேன் தாக்ஷி-சூட்சியே (அ)

பல்லவித் தொடர்

பாண்டியன்-குமாரியே பார்புகழ்-கெம்பீரியே
பாலன்-குற்றுலன் பணிவுதாரியே
என்குருவின்-சங்சரலிங் கம்தமிழின்-சங்கீதவாரியே
சந்தங்-குவிந்தேன் பணிந்தேன் பாருமம்மணி (அ)

அல்:—மந்திரிகாள்! எல்லோரும் அமருங்கள்; (நடன மாதர்களைப் பார்த்து) சகிகாள்! உங்கள் ஆடல் பாடல்கள் நடக்கட்டும்.

## நடனமாதர்கள் தரு

(இனிக்கத் தனிக்க விரித்தபடுக்கை என்றமெட்டு)

பல்லவி

ஆலவாய்-திருமாலின் தங்கையே
அன்னையே-கண்காக்ஷி அருள்கொடு-மீனுக்ஷி (ஆல)

அநுபல்லவி

அம்பிகா-உன்னையே நம்பினேமம்மா
தம்பிரான்-சண்முகன் தாயே-யென்னம்மா (ஆல)

பல்லவித் தொடர்

தயங்கிடும்-மனத்துயரம் தீர்த்திடும்
தொழுதேன்-ரூபசிங்காரி பழுதில்லாக்கெம்பீரி (ஆல)

அல்:—சபாஷ்! மெத்த சந்தோஷம்.

[நடனமாதர்கள் செல்கின்றார்கள்]

அல்:—சேடிகாள்! நாம் இதுநாள்வரை ஸ்ரீ மீனும்பிகையின் கிருபா கடாக்ஷத்தினுல் ராஜரீகம் மேன்மையாக நடந்தேறியது. மறுபடியும் நமது ராஜ்பத்தின் சீர்திருத்த முறைகளைப் பற்றி விசாரிக்க ஆவலுள்ளவளாக இருக்கின்றேன்.

சே:—அம்மணி அப்படியே.

## அல்லி தரு

(மாதுபாகமானவா என்றமெட்டு)

சேனைகட்கதிபதி வாராயிதுததி
சீறுற்ற செய்கையும் சொல்வாய் செங்கமலம்
சீக்கிரஞ்சொல்லதிபதியே இதுதருணம் வெகுவிரைவாம் (சே)

செங்:—அம்மணி! சேனைசைன்யங்கள் விஷயத்தைப்பற்றித் தங்களுக்குக் கவலையே வேண்டாம்.

அல்:—நல்லது; சந்தோஷம்.

## அல்லி தரு

(அவனியில் யாரேனும் என்றமெட்டு)

இராகம்-கானடா, தாளம்-ஆதி.

உத்திரவுலைக்கும் ரத்தினம்பாள்
ஞாயமுண்டோடி ஞாயமுண்டோடி
நவில்வா யின்றேடு (உத்)

ரத்:—மகாராணி யானும் அதி ஜாக்கிரதையுடன் இருந்து வருகின்றேன் அம்மணி.

அல்:—அப்படியா! மெத்த சந்தோஷம்.

## அல்லி தரு

(இந்தக்கதை தான்முன் என்றமெட்டு)

இராகம்-இந்துஸ்தான், பியாக்தாளம்-ரூபகம்.

மந்திரி பவளசேன வார்த்தை சொல்லடி
நமது நகரிலுள்ள குடிகளனைவரும்
எப்படி யிருந்து-வாரார் (மந்)

அல்:—பவளசேன! நமது நகரிலுள்ள பிரம, க்ஷத்திரிய, வைசிய, சூத்திரர் என்னும் நான்கு வர்ணத்தாரும் அவரவர் தொழில் முறைகளைச் செவ்வனேசெய்து வருகின்றார்களா? மேலும் மாத மும்மாரி பொழிந்து குடிகளிட்ட வேளாண்மை செழிப்புற்றுச் சுகமாக வாழ்ந்து வருகின்றார்களா?

பவ:—அம்மணி! ஸ்ரீ மீனம்பிகை சமேதராக விளங்கும் சாக்ஷாத் சோமசுந்தரக் கடவுளின் கடாக்ஷத்தால் சகலமும் சரிவர நடந்தேறி வருகின்றது தாயே.

அல்:—கல்யாண்! மெத்த சந்தோஷம்? (அல்லி சிம்மாசனத்தை விட் டிறங்கி.)

## அல்லி தரு

(நட்டகல்லைத் தெய்வம் என்ற மெட்டு)

ஆவலுடன்-காவல்செய்யும் அன்புமிகும்-கொத்தவால்
காவல்வெகு-ஜாக்கிரதை கண்டிப்பா-யறியவும் (ஆ)

அல்:—அடி! கொத்தவால் ஆசாரவாசலில் ஜாக்கிரதையுடன் காவல் புரிந்து வருகின்றாயா?

கொத்:—அம்மணி! காவல்வெகு ஜாக்கிரதை; ஒரு ஈ கூட உள்ளே நுழையாது.

அல்:—பவளசேனு! வெளியில் என்ன கூக்குரல்?

பவ:—கொத்தவால்! வெளியில் சென்று பார்த்துவா?

கொத்:—அம்மணி! குடிகள் வந்திருக்கின்றார்கள்.

அல்:—நல்லது! வரும்படி செய்வாய்.

[குடிகள் விசனமுறல்]

(தந்தானமடி தந்தானமடி என்ற மெட்டு)

### கண்ணிகள்

| | |
|---|---|
| நஞ்சை புஞ்சை | பயிர்களெல்லாம் |
| நாசமானதம்மா | அம்மம்மா நாசமானதம்மா |
| அம்மாடி | நாசமானதம்மா |
| நாங்களென்ன | செய்வோமம்மா |
| ராணியே அம்மா | அம்மாடி ராணியே அம்மா (நஞ்) |
| கரடி புலி | யானை சிங்கம் |
| ஓடியே | வருது |
| அம்மாடி | நாடியே வருது |
| எம்மைத் | தேடியே வருது |
| இந்தக் கொடுமைக்கென்ன | செய்வோ மம்மா |
| கூறவே வந்தோம் | நாங்கள் கூறவே வந்தோம் (ந) |

குடி:—அம்மணி நாங்களிட்ட பயிர்கள் எல்லாம் பாழாக்கி எங்கள் நந்தவனங்களை எல்லாம் அழித்துவிட்டதம்மா. என்ன செய்யப் போகின்றோம். [அழுகின்றார்கள்]

### அல்லி தரு

(சிங்காரச் சோலையலங்காரம் என்ற மெட்டு)

இராகம்-இந்துஸ்தான் கமாசு, தாளம்-ஆதி.

| | |
|---|---|
| அச்சவேண்டா | முங்களுக்குக்-காட்டி |
| லதஞ் செய்துவரும் | விலங்கைக் கணை-பூட்டி |
| யானையொடு | காடி புலி-காட்டி |
| லவதாரக் குடி | ஜனங்களை-பாராட்டி |
| பதைக்கவே | மிருகங்களை-மாட்டி |
| சிதைத்து வதை | கூட்டி |
| பலத்தை நிலை | நாட்டி |

பயமதையே யோட்டி
பாலிப்பேன் சீமாட்டி (அச்)

அல்:—குடிகாள்! நீங்கள் அஞ்சவேண்டாம்; யான் இப்பொழுதே வனஞ்சென்று அக்கொடிய விலங்கினங்களை வதைசெய்து வருகின்றேன்; செல்லுங்கள்.

குடி:—நல்லது தாயே! எப்படியாவது காப்பாற்றவேண்டும்.

[குடிகள் போகின்றார்கள்]

அல்:—அடி; கொத்தவால் நீ சீக்கிரஞ் சென்று வேடுவஜாதிப் பெண்களை அதிவிரைவுடன் வரும்படி ஏற்பாடு செய்து நீங்களும் உடனே வேட்டைக்கு வேண்டிய,

(முருகன் திருமால் மருகன்-என்றமெட்டு)

பல்லவி

ஈட்டி வில்லம்பு கோடாரி-வெகு
தாட்டிகமாகவே-பூட்டியே வருகுவீர் (ஈ)

அநுபல்லவி

தாட்டிகமாகவே ஓட்டி-வதைத்திட
தடிகளுடன் வேல்-மாட்டியே
வெடிக்குண்டுகள் தான்-நீட்டியே (ஈ)

சரணம்

துருப்புடனே கொடித் துப்பாக்கி தாங்கிய
போர்வீர ரணவரைக் கூட்டி
இரும்புத்தடிவளை சிறுவலை பெருவலை
சீக்கிரமே காட்டில் பூட்டி
செந்நாய் கரடிகள் சிறுத்தை துரத்திட
சீறிய மிருகங்கள் சிதறியே யோடிட
சிங்கம்புலியானை நின்றுமே கதறிட
சிறுகற்கொடு அதிவிரைவினில்
சேகரித்திட நீ சென்றுவா (ஈ)

அல்:—தோழிகாள்! நீங்கள் உடனே சென்று எல்லா ஆயுதங்களையும் தயார் செய்துகொண்டு சீக்கிரம் புறப்பட்டு வாருங்கள்.

## சீன்—4. இடம்—வேட்டைமார்க்கம்.

பாத்திரங்கள்-அல்லி, வேடுவப்பெண்கள், கிருஷ்ணன், அர்ச்சுனன்

[வேட்டைக்குச்செல்லும் அல்லியைக் கிருஷ்ணன், அர்ச்சுனனுக்கு ஓர் மரத்தடியிலிருந்து காண்பிக்கின்றான்]

கிரு:—அர்ச்சுனு! பார்த்தாயா இவள்தான் அல்லி.

அர்:—இவள்தானு! அல்லி (இவ்விதஞ்சொல்லிக் கொண்டே அல்லியைத் தாவிப்பிடிக்கப் போகின்ருன்.)

கிரு:—காண்டீபா! பேஷ் என்னவேலை செய்யத்தொடங்கினுய் நானும் உன்னேடு வேலையற்றுத் தீர்த்தயாத்திரைக்கு வந்தேனே. என் தலைவிதிப்பயன்; நல்லது, அல்லியைப் பார்த்தாய் விட்டதல்லவா? வா நமது நகருக்கேகலாம்.

அர்:—ஆஹா! என்ன அழகு என்ன ஒய்யாரம் என்னகெம்பீரம் ஏன் மாமா நடுவில் பரபரப்புடன் செல்கின்ற இளங்கன்னி தானே அல்லி? பரந்தாமா இவளைப்போல் எந்தக் கன்னியேனும் நீர் பார்த்ததுண்டா அல்லது உமது தங்கை சுபத்திரை பவளக்கொடி நாககன்னி இவர்களில் இப்படிப்பட்ட ரூபலாவண்யம் எவருக்கேனும் உண்டா? நல்லது மின்னெளியாள்கூட இவ்வளவு அழகில்லையே மாமா.

## அர்ச்சுனன் தரு

இராகம்-இந்துஸ்தான், பியாக்-தாளம்-ஆதி.

பல்லவி

பார்த்தீரா அழகை-மாமா (பா)
எந்தன் மாமா
சொந்த மாமா
பரந் தாமா (பா)

அநுபல்லவி

கண்ணினுல் கண்டேனே கட்டழகி மாதை
உன்னி நடந்திடும் மெல்லி யிடையாளைப் (பா)

சரணம்

ரதியை வெறுக்கும் ராணி
மதியைப் பழிக்கும் மேனி
மண்டலாதி பதியோரும்
தொண்டு செய்வா ரிவளுக்கு
கண்டவுட னெந்தனுக்கு
மண்டைவலியுந் தோணுதே (பா)

அர்:—மாமா! பார்த்தீரா?

கிரு:—நான் பாத்துவிட்டேன், நீ பார்த்தாகிவிட்டதல்லவா? வா, நம் நகருக்குப் போவோம்.

அர்:—பரந்தாமா! போகலாம் தடை இல்லை, நீருரைத்த வார்த்தையில் குறைவு இருக்கின்றதே?

கிரு:—என்ன குறைவு?

அர்:—கோபாலா! பார்த்தாகி விட்டதல்லவா என்ற வார்த்தையோடு அல்லியைச் சேர்த்தாகிவிட்டதா என்றவார்த்தை குறைவில்லையா?

கிரு:—மைத்துனா! பேஷ் மெச்சினேன். உன் வாய்ச் சாதுர்யத்தை நானும் உன் விஷயம் தெரிந்து உன் பின்னே வந்தேனே! என்னைச் சொல்லவேண்டும், குளிக்கப்போய்ச் சேற்றைப் பூசினது போலல்லவா ஆயிற்று. வேண்டாம் வந்துவிடு மரியாதையாய்.

அர்:—பரந்தாமா, கோபாலா, நீலமேக சாமளா! என்ன இவ்வாறு உரைக்கின்றீர்களே நாம் வந்தவேலை ஒன்றாக இருந்தாலும் இப்போது, நான் நேரில்கண்ட

## அர்ச்சுனன் தரு-கண்ணிகள்

(செந்தின்மா நகரம் என்ற மெட்டு)

இராகம்-மோகனம், தாளம்-சாப்பு.

கோதையா ளல்லியை-மணஞ் சூட்டாமல்
கோபாலனே வர மாட்டேன்-வந்தால்
யானுயிர் மீளவு மாட்டேன்-உயர்
ஆலவாய் திரு மாது அல்லியைச்
சாலவே நமை ஜனமும் போற்றவே (கோ)

அர்:—மாமா! தாங்கள் என்ன சொன்ன போதிலும் எனக்கு ஒன்றும் தோற்றாது. எனது அன்பெல்லாம் அவள்மீது பாய்ந்துவிட்டது; ஆனதினால், அவளைக் கல்யாணம் செய்யாமல் நம் நகருக்கு வரமுடியாது.

## கிருஷ்ணன் தரு

தோஷமே பரிகாரஞ் செய்ய வந்தோம்
தொல்வினை எண்ணிடலாமா-நம்மைச்
சேரும் மோசம் வீணில் போமா-உந்தன்
கூடவந்ததுஎன் தலைவிதி-நீதொடுத்ததுதானோ நல்மதி (தோ)

கிரு:—இதென்ன தர்மசங்கடமாய் இருக்கின்றதே. அர்ச்சுனா வருகின்றாயா அல்லது உன்னைவிட்டு இந்திரபிரஸ்தம் செல்லவா?

அர். தையலைக் கவி யாணமுஞ் செய்திட
தந்தை தாய் குரு தெய்வம் நீயே-உனைத்
தாள்பணிந்தேன் வருவாயே-சும்மா
ஞாலமீதினில் வாது செய்யாதே
தாளவே முடி யாது மைத்துனா (கோ)

கிரு. அன்னை தந்தையர் தருமனும்-உன் தம்பிமாரும்-உந்தன்
தங்கை முதலா யெல்லோரும் தினம்

தான்நினைத்துமே துயரடைகுவர்
நாளடைந்ததுவா நடந்திட (தோ)

கிரு:—காண்டீபா! இதென்ன தொல்லை, வரமுடியுமா? முடியாதா? நான் போகின்றேன்.

அர்:—மாமா! இம்மாதரசியைக் கண்டமாத்திரத்தில் என் மனமானது காற்றெதிர்ப்பட்ட கொடிமரத்தின் பட்டாடைபோல், நம் நகரம் போவமா, வேண்டாமா என்று நினைத்து நினைத்து,

## கண்ணிகள் தர்க்கம்

(கண்மணியே தன்மையுள்ள என்றமெட்டு)

அர். என் மனது தேறவில்லை
யேந்திழை யல்லியின்தொல்லை
என்ன செய்வேன் மைத்துனனே
உனைத்துணையாய் நம்பினேனே (என்)

கிரு. ஆசைமீறி மோகிப்பதால்
அர்ச்சுனனே என்னலாபம்
ஆனதினல் யேகலாம்வா
மைத்துனநம் தேசத்திற்கே (ஆ)

அர். நீரெனக்குச் சொந்தமாமன்
நானுனக்கு நல்மைத்துனன்
மாதெனக்கு மனைவியாக
மணமதுசெய் பரந்தாமா (என்)

கிரு. மாமன் வேலை செய்ய யானும்
மைத்துனனே வந்தேனோடா
தாமெனக்கு இந்தவேலை
தந்ததுபோதுமே வாராய் (மா)

கிரு:—காண்டீபா! உன்னுடன் கூட வந்ததற்கு நல்லவேலை தந்தாய் எனக்குப் போதும்போதும் தீர்த்தயாத்திரை.

அர். வ-ப்:—மாமா! கோபம் வேண்டாம் மன்னிக்கவேண்டும். நீர் எனக்குச் சொந்தமாமன் இல்லையா? அதிருக்கட்டும் மாமா கல்யாணம் எப்படியாவது செய்தே தீரவேண்டும்.

கிரு:—(தனக்குள்) இவன் பித்துப்பிடித்து அலைகின்ருன்; இவன் என்னசொன்னுலும் வரவுமாட்டான். பிடிவாதனைக்காரன் நல்லது மைத்துன அல்லியைக் கட்டாயம் விவாகஞ்செய்யவேண்டுமென்று எண்ணமிருந்தால்,

(நாச்சோஹானு என்ற மெட்டு)

இராகம்-இந்துஸ்தான், தாளம்-ஏகம்.

பல்லவி

கொண்டுவாநீ கொண்டுவாநீ
கொண்டுவாநீ அல்லிகணை
யாழிகொண்டு மறவாமலேசென்று (கொ)

வ-ம்:—காண்டீபா! நீ அல்லியினிடத்தில் எப்படிச் செல்லவேண்டும் தெரியுமா?

அநுபல்லவி

தரு. ஏவல்கள் செய்திடும் பாவையைப்போல
காவலனே நல்ல காண்டீபனே சென்று (கொ)

வ-ம்:—அம்மாதின் விரலிலணிந்திருக்கும் கணையாழியைக் கட்டாயம் கொண்டு,

தரு. தந்தாலே அல்லியைச் சூட்டுவேன் மாலை
தடையில்லை கணையாழி தவறாமல் சென்றுமே (கொ)

கிரு:—விஜயா! உனக்கு விவாகம் தேவையானல் இக்ஷணமேசென்று அல்லி விரலி லணிந்திருக்கும் கணையாழியைக் கொண்டுவந்தால் உடனே கல்யாணம். இல்லாவிடில் இப்போதே நடப்பேன் பிரயாணம்.

அர்:—(அர்ச்சுனன் கிருஷ்ணனை ஓடிப்போய்க் கட்டி யணைத்துக் கொண்டு) மாமா! தாங்கள் தான் இதற்குத் தகுந்த யோசனை சொல்லவேண்டும். நான் அதன்படி நடக்கச் சித்தமா யிருக்கின்றேன்.

கிரு:—இது கூடவா உனக்குச் சொல்லவேண்டும். இருந்தாலும் பாதகமில்லை. முன்னமேயே நீ எனக்கு மாமா வேலை கொடுத்திருக்கின்றாய். நல்லது அர்ச்சுனு அல்லி வேட்டையாடு மிடத்தில் உனது உருவை மாற்றிப் பேடி உருவ மெடுத்து அவள் தோழியைப்போல் நடித்து அல்லி களையாகிப் படுக்குஞ் சமயம் தெரிந்து தந்திரமாகக் கணையாழியைக் கொண்டுவந்து விடு.

அர்:—அவ்விதம் உடனே கொண்டுவந்தால்?

கிரு:—உடனே கல்யாணம்.

அர்:—மாமா உண்மை தானே?

கிரு:—உண்மைதான். சீக்கிரஞ் செல். [போகின்றான்]

சீன்-5. இடம்-மதுரையடுத்த அடர்ந்த வனம்.

பாத்திரங்கள்-அல்லி, தோழிகள், வேட்டை யாட்கள், பேடி உருவங்கொண்ட அர்ச்சுனன்.

## அல்லி வேட்டைப் பாகம் அல்லி தரு

(அடடா அடடா எமனே என்ற மெட்டு)

பல்லவி

* போகுது போகுது ஓடுங்கள்
செடிப்புதரைக் கலைத்துமே-பாருங்கள் (போ)

அநுபல்லவி

ஓடுது ஒருசிங்கம் நாடுதே மானினம்
நாட்டமுடன் ஜந்து கூட்டங்கூட்டமாக (போ)

சரணம்

வேங்கை கரடி செந்நாய் விதவிதப் புலி ஓநாய்
காவுங் கரடி யானை கருத்த யாளியும் பன்றி
பருத்த வுடலெடுத்த கொழுத்த குட்டிகளுடன்
பயிரை யளித்ததொரு பாழும் விலங்கினங்கள் (போ)

அல்:—சேடிகாள்! அதோ பார்த்தீர்களா? மிருகங்களின் கூட்டத்தை,

## அல்லி தரு

(அஞ்சாத நெஞ்சமுள்ள ஆண்பிள்ளை என்றமெட்டு)

இராகம்-தோடி, தாளம்-ரூபகம்.

பல்லவி

புலி வேங்கை கரடி செந்நாய்ப்
போகுதடி நேராய்

அநுபல்லவி

செடிப்புதரைக் கலைத்து வகுந்து வளைத்து
வலிவுடன் பெரு வலையைக் கட்டுங்கள் (புலி)
பீரங்கி, துப்பாக்கிவெடிச் சப்தமுங் கேட்டு
ஆரவாரச் சப்தஞ் செய்து
அதனதன் னிருப்பிடம் விட்டு (புலி)

[பேடி உருவங்கொண்டு அர்ச்சுனனும் அல்லி யுடனே சேர்ந்துசேடியைப்போல் நடிக்கின்றான்.]

* இப் பல்லவியுடன்: பயந்து, அதோ, இதோ எனச் சேர்த்துப் பாடவும்.

அல்:—சேடிகாள்! விலங்கினங்களை எல்லாம் வேட்டையாடி வதை செய்து விட்டோம். தற்சமயம் வேட்டையாடின கஷ்டத்தினுல் எனக்கு

## அல்லி தரு

இராகம்-நாதநாமக்கிரியை, தாளம்-ஆதி

பல்லவி

களையுண்டாகுதே-சேடி களையுண்டாகுதே சகி (க)

அநுபல்லவி

களையுண்டாகுதே சேடி-என் கால்கை பிடியுங்கடி
களையுண்டாகுதே-சேடி களையுண்டாகுதே சகி (க)

அர்:—பரந்தாமா! இதுவு முன் திருவருள்தான். (சட் இதென்ன பெருந் தீங்குநேரிடப் பார்த்ததே) அம்மணி! இன்று வேட்டை மிகவும் கஷ்டம். களைப்பும் கைகால் வலியும் இருக்கத்தான் செய்யும்.

அல்:—சகிகாள்! எனக்கு ஒன்றும் தோன்றவில்லை. களைப்பும் தாகமும் மேலிடுகின்றது. நான் சற்று கீழே சயனித்துக் கொள்ளுகின்றேன். எனது கைகால் உடம்பைப் பிடித்து நன்ருய் அயர்ந்து நித்திரை வரும்படி ஒரு கதை சொல்லுங்கடி.

அர்:—அம்மணி சொல்லுகின்றேன் சயனித்துக் கொள்ளுங்கள்.

[அர்ச்சுனனுக்குச் சந்தோஷம் மேலிட்டு தனது வரலாற்றைமுழுதும் அல்லிக்குச் சொல்லுகின்ருன்]

## நொண்டிச் சிந்து

ஜலவள நிலம்பொருந்தும்-மிகச்
சிறப்புற்ற இந்திரபிரஸ்தமென்னும்
ஒருநகர் வடக்கேயுண்டு-அதை
உகந்துமே யாள்பவ ரைவருண்டு
குருகுல மரபினர்கள்-அவர்கள்
குந்தியின் புதல்வராம்-பாண்டவர்கள்
மூத்தோன் தருமனென்பார்-தம்பிமார்
வீமனருச்சுனன் நகுலன்சகா-தேவரென நால்வருண்டு
இவர்களில் வில்விஜயனருச்சுனனொருவனுண்டு-அவன்
எட்டாத வில்லைவளைத்துத்-துரோபதையை
மணமுடித்தானவன்-ஆளிலழகன்
ஆதிவேத முற்றும்பார்த்தவன்-இப்போது

கால்பிடிக்குஞ் சேடிப்பெண்ணாய்-உருவுங் கொண்டவன்
உனக்குத் தகுந்தகணவன்-அம்மா, அம்மா,
உன்னாசைக்கு மிகுந்தகணவன்-அவனொருவனே
அழகினில் குணமுடையான் (ஜல)

[கதைசொல்லிக்கொண்டே உடம்பைப் பிடித்துக் கணையாழியை மெதுவாய்க் கழற்றிக்கொண்டு ஓடுகின்றான்]

[அல்லி திடுக்கிட்டெழுந்து கோபத்துடன்]

## அல்லி தரு

(ஆரடா ஆரடா என்றமெட்டு)

இராகம்-இந்துஸ்தான்-நோட், தாளம்-ஏகம்.

பல்லவி

யாரடா யாரடா யாரடா யாரடா யாரடா கடையா
வெகு ஆண்மைத்தனமொடு இங்குவந்த முழுமடையா

அநுபல்லவி

ஆண்காற்றடிக்காத அல்லிபெண்றறியாமல்
பெண்பிள்ளையைப்போல ஆண்பிள்ளைவந்தவன் (யா)

சரணம்

ஈயாய்ப்பறந்தாலும் இருதுண்டாய் வெட்டுவேன்
எங்கெங்குசென்றாலு மங்குவிரட்டுவேன்
ஆக்கினைசெய்துன்னை அடித்துமே கட்டுவேன்
அச்சமில்லாயலே இக்ஷணம்வாட்டுவேன் (யா)

அல்:—அடா பாதகா! துஷ்டா! கொடிய சண்டாளா! என்ன தைரியம், நீயா ஆண்பிள்ளை.

[அல்லி அதிகக் கோபங்கொண்டு தன் சேடிகளிடம் சொல்லுகிறாள்.]

## அல்லி தரு

(முன்னமே சொன்னேனடி என்றமெட்டு)

தாதியே செங்கமலம்-இது
நீதியோடி காலம்
தாழ்வடையவொரு பாதகனுனவன்
பாடிவந்த கேவலம்
ஆண்பிள்ளை யானவண்டி-பொல்லா
ஆங்கார முள்ளவண்டி

பெண்பிள்ளைபோல் வந்து கலந்துமேநின்றுண்டி
கண்டு வதையுங்கடி
அச்சமில்லாதவண்டி-கொச்சைக்
கதையு முரைத்தாண்டி
காலும் பிடித்துமே-நாளுமே சென்றுண்டி
தேடிப் பிடியுங்கடி-அடி (தா)

தோ:—அம்மணி! என்ன விசேஷம்? ஏனிப்படிப் பதறிக் கோபத்துடன் நிற்கின்றீர்கள்?

அல்:—அடி தோழிகாள்! எல்லோரும் எங்கு சென்றிருந்தீர்கள்? யாரோ ஒருவன் பெண்போல் திருட்டுவேடம் புனைந்து நம்முடன்கூடவே இருந்து வீண்வார்த்தைகளும் பகர்ந்து கேடான ஒரு கதையும் சொல்லி என் கைகால்களையும் பிடித்துச் சென்றானே. அவன் என் கையி லகப்பட்டிருந்தானுகில் (பல்லைக்கடிக்கின்றாள்) என்ன கதி ஆவானே தெரியாது. சீக்கிரம் அவனைத் தேடிப்பிடித்து வாருங்கள்.

தோ:—அம்மணி! உத்திரவுப்படியே செய்கின்றோம்.

[அல்லி முதலனைவரும் நகருக் கேகுகின்றார்கள்.]

## சீன்-6. இடம்-மதுரைமாநகரின் ஓர் பாகம்.

பாத்திரங்கள்-கிருஷ்ணன், அர்ச்சுனன்.

அர்:—மாமா! நீர் சொல்லியபடி அல்லியிடஞ் சென்று அதிகக் கஷ்டத்துடன் கணையாழியைக் கொண்டுவந்தேன். இனியாவது என்மீது கிருபை கூர்ந்து அந்த அல்லியெனும் மெல்லிடையாளை எனக்கு,

### அர்ச்சுனன் தரு

(சத்தியம் நீர் செய்தால் என்ற மெட்டு,

இராகம்-கமாசு, தாளம்-ஆதி.

பல்லவி

மணமாலை சூட்டிவையுமே மாயபிரானே (மண)

அநுபல்லவி

சேடிகளைப்போல கூடியே நடித்தேன்
தேடியம்பைப் பொறுக்கிக் கரந்தனில் கொடுத்தேன்
களையுற்றபோதவள் காலையும் பிடித்தேன்
கதைசொல்லச் சொன்னுளென் வரலாற்றைப்படித்தேன் (ம)

அர்:—மாமா! இனியாவது என் எண்ணத்தைப் பூர்த்தி செய்யக் கூடாதா? தயவு இல்லையா?

கிரு:—அர்ச்சுனு நீ மகாக் கெட்டிக்காரன். இரவு பகல் தூங்கினுயா இல்லையா? நல்லது உன்னுலெனக்கு ஒரு காரிய மாகவேண்டி இருக்கின்றது. அதாவது,

## கிருஷ்ணன் தரு

(ஏண்டிஎன்னை யிந்தசுனைதனில் என்ற மெட்டு)

இராகம்-கானடா, தாளம்-ஆதி.

தாங்முடியாத் தண்ணீர் தாகந்தீர்த்தா லுனக்குத்
தையலல்லியைமணஞ் செய்து வைப்பேனுனக்கு (தா)

தாளமுடியாதென்னல் தார்வேந்தா என்மைத்துனு
தேடிநீ சென்றுஜலங் கொண்டோடி வாடாமுன்னே (தா)

கிரு:—அர்ச்சுனு! எனக்குத் தாகமோ அதிகமா யிருக்கின்றது எப்படியாவது விரைவினில் ஜலங்கொண்டுவா இதைப்பற்றி உன் மனதில்,

(ஷை மெட்டு)

சஞ்சலம் வேண்டாம் நெஞ்சில்
சடுதியில் ஜலமுங் கொண்டு
தந்திடி லுந்தனுசை
தவிர்ப்பேனே மனங்கொண்டு

68053

அர்:—பரந்தாமா! தங்களிஷ்டம் போல் கொண்டு வருகின்றேன்.

கிரு:—அர்ச்சுனு! ஜலம் சீக்கிரம் வரவேண்டும் எக்காரணத்தைக் கொண்டும் தாமதிக்காதே.

அர்:—மாமா! தாமதிப்பேனு? இதோ சீக்கிரம் வருகின்றேன். வந்தவுடன் கல்யாணம்.

கிரு:—அப்படியே ஆகட்டும் சென்றுவா?

[அர்ச்சுனன் ஜலங்கொண்டு வரச்செல்கின்றுன்]

கிரு:—(தனிமொழி) அர்ச்சுனன் ஜலங்கொண்டு வரப்போகின்றுன். அவன் ஜலமெடுக்குங் குளத்தில் அல்லியைப்போ லுருவுண்டாக்கி அவள் நிழல் தண்ணீரில் தோன்றும்படி அங்கிருக்கும் மரக் கிளையில் கட்டிவைத்து வேடிக்கை பார்க்கவேண்டும்,



O-AMKP.A

சீன்-7. இடம்-நந்தவனத்தில் குளக்கரை.

பாத்திரப்-அர்ச்சுனன்

[ஜலத்திலுள்ள அல்லியினுருவைக் கண்ட அர்ச்சுனன் மோகித்தல்]

அர்:—ஆஹா! என் பாக்கியமே பாக்கியம். கும்பிடப்போன தெய்வம் குறுக்கிட்டார்போல் எனதருமைக் காதலியாகிய கண்மணி! இக் குளத்திலுள்ள ஜலத்தினுள் வந்திருக்குங் காரணமேன்? நானுனக்காக இக்கஷ்டப்பட்டு மாமனுவிடப்பட்ட வேலைகளைச் செய்துகொண்டிருக்க நீயே என்னைத் தேடிவந்து விட்டாயே என் அதிஷ்டமே அதிஷ்டம்.

அர்ச்சுனன் தரு

(பருவகாலத்தைவீணிற் என்ற மெட்டு)

இராகம்-பிலஹரி, தாளம்-ரூபகம்

சித்தம் மயங்கியே நான்
பித்தங்கொண்டலைகின்றேன் அல்லி அல்லி
தண்ணீரை விட்டெழுந்து-தாவியோர்
முத்தந்தாடி அல்லி அல்லி.

அர்:—என தருமைநாயகி! ஏன் இங்கனம் வந்தாய்.

மானே மருவவாடி-மயிலே சிங்காரலேடி அல்லி அல்லி
தேனே கற்கண்டே யென்னைத்
தேடியே வந்தாயடி அல்லி அல்லி

அர்:—எனதாசைக்குரிய அஞ்சுகமே! வாய்திறந்து வார்த்தை பேசக் கூடாதா? ஏன் மௌனம் சாதிக்கின்றாய் கண்மணி காதற் கிளியே கட்டிக் கரும்பே எனைப் பார்க்க வெட்கமாய் இருக்கின்றதோ?

(ஷை மெட்டு)

மலர்மாலை சூடி நாமும்
மருவிவிளை யாடுவோம் அல்லி அல்லி
நீ-மயங்காதே ஜலத்தினில்
மாதேயான் வாரேனடி அல்லி அல்லி

வ-ம்:—கண்மணி கட்டியணைய இதோ வந்துவிட்டேன்.

[என்று குளத்தில் குதிக்கின்றான்]

[அர்ச்சுனன் அல்லியைத் தேடியுங் காணமல் திகைத்து நிற்கிறான்.]

அர்:—ஆஹா! மதிமோசம் போனேனே. இனி தாமதஞ் செய்யக் கூடாது. பரந்தாமன் ஜலத்திற்குக் காத்துக் கொண்டிருப்பார். நேரமாயிற்று ஜலங் கொண்டு செல்லவேண்டும். [செல்கின்றான்]

சீன்-8. இடம்-மதுரை நகரில் ஒருபாகம்.

பாத்திரங்கள் - அர்ச்சுனன், கிருஷ்ணன்.

கிரு:—அர்ச்சுனு! ஜலங் கொண்டுவர ஏன் இவ்வளவு தாமதம்? எவ்வளவு தூரஞ் சென்றாய்? (என்று சொல்லியவண்ணம் ஜலத்தைக் குடிக்கின்றார்.)

அர்:—மாமா! ஜலங் கொண்டுவரச் சென்றேன், குளத்தி லல்லியைக் கண்டேன். ஜலத்தில் குதித்துப் பிடிக்கச் சென்றேன். தேடிப் பார்த்தேன் காணவில்லை, ஏமாந்துபோனேன். மாமா இனியாவது விவாகத்திற்குவேண்டிய வேலைகளைச் சீக்கிரமாக ஏற்பாடு செய்யுங்கள்.

## கிருஷ்ணன் தரு

(நல்வாக்கு நீ கொடடி என்ற கோவலன் மெட்டு)

| | | |
|---|---|---|
| கன தூக்கம் | வருகுதடா-என் | |
| கண்ணயர்ந்து | சொக்குதடா | |
| கண்ணயர்ந்தெழுந்த | பின்னே-அல்லியை | |
| கல்யாணஞ் | செய்வேனடா | (கன) |
| தூங்கிவிழித்த | வுடன்-உந்தன் | |
| துக்கமதை | மாற்றுவண்டா | |
| துக்கதை | மாற்றுவண்டா-என் | |
| பக்சும் வாடா | மைத்துனனே | (கன) |

கிரு:—(தனிமொழி) இவனை நன்றாய் அலையும்படி செய்யவேண்டும். மைத்துனு! ஜலங் குடித்தவுடன் எனக்கு ஒருவிதமான களையுண்டாகிறது, சற்றுநேரம் கீழே உட்காரு உன் துடைமேல் என் சிரசை வைத்து நித்திரை செய்துவிட்டுப் பிறகு விவாகம் செய்து வைக்கின்றேன்.

அர்:—(தனக்குள்) பேஷ்! சரியான ஆசாமி, இருந்தாலும் பாதகமில்லை. நல்லது; மாமா! சயனித்துக்கொள்ளுங்கள்.

[கிருஷ்ணன் அர்ச்சுனன் துடைமேல் தன் சிரசைவைத்து நித்திரை புரிகின்றார்]

[அர்ச்சுனன் அல்லியின்மீது ஆவல்கொண்டு தன் துடையை எடுத்துவிட்டு அதற்குப் பதிலாகச் சமீபத்திலிருந்த பாராங் கல்லைக் கிருஷ்ணனுக்குத் தலைக்குயரமாக வைத்துவிட்டு அவள் இருக்கும் திசையை நோக்கிச் செல்கின்றான்]

அர்:—ஆசாமி ஒருவேளை தூங்குகிறவர்போல் பாவனை செய்வார், எழுப்பிப் பார்க்கலாம். மாமா! மாமா! நல்லது நீர் தூங்கும். தூங்கிவிழிக்குமுன்னே அல்லியைப் பார்த்துவிட்டுவருகிறேன்.

(தக்கப்பாராங்கல்லைத் தூக்கி என்ற வர்ணமெட்டு)

இராகம்-மோகனம், தாளம்-ஆதி.

கண்ணிகள்

* தலையைக் கரங்கொண்டு எடுத்துக்-கல்லைத்
தலைக்குயரமாக வைத்து-நான்
இக்ஷணமென் துடை விடுத்து-இப்போ
எகுவேனல்லியை யடுத்து (தலை)

அர்:—மாமா! பரந்தாமா! இவர் நன்றாய்த் தூங்குகின்றார். எழுந் திருப்பதற்கு எவ்வளவு நேரமாகுமோ, ஆனதினாலிவர்

(ஷை மெட்டு)

துயில்புரிவ தனாலே-கண்ணன்
தூங்கிவிழிக்கு முன்னாலே-அந்த
அல்லியைப் பார்த்துக் கண்ணாலே-ஓடி
வருகுவேனே இனி-மேலே (தலை)

அர்:—இதுதான் நல்ல சமயம். போய்ச் சீக்கிரம் பார்த்து வரலாம்.

[அர்ச்சுனன் அல்லியைத் தேடிச்செல்ல, கிருஷ்ணன் தூங்கி எழுந்து அர்ச்சுன னைப்பார்க்கக் காணாமையால், குறிசொல் லும் குறத்திபோல் வழியில் செல்கின் றார். தனக்கு வைத்த தலையணைக் கல் லையும் பார்க்கின்றார்.]

கிரு:—(கல்லை எடுத்துப்பார்த்து) அர்ச்சுனா! அந்தமட்டும் கல்லைத் தூக்கி என் தலைமேல் போடாமல் தலைக்குக் கீழே வைத்துப் போனதைப்பற்றி மிகவும் மெச்சுகின்றேன்.

---

* இப்பாட்டுடன்: மாமன், கண்ணன், கிருஷ்ணன், மாயன் முதலிய வார்த்தைகளைச் சேர்த்துப் பாடவும்.

## சீன்-9. இடம்-மலைச்சாரல் அர்ச்சுனன் செல்லும்வழி.

பாத்திரங்கள்-அர்ச்சுனன், கிருஷ்ணன் (அல்லது) மாறுவேடம் பூண்ட குறத்தி.

### குறத்தி வேடம பூண்ட கிருஷ்ணன் வருகை

(பூவருந்திருவே என்ற மெட்டு)

இராகம்-புனுகவராளி, தாளம்-ஆதி.

பல்லவி

பச்சை குத்தலையா-அம்மா
இச்சை தீர்க்கலையா
அம்மா பச்சை-தேளுப் பச்சை
பூரான் பச்சை-மீனுப் பச்சை
குளத்துப் பச்சை-பச்சை பச்சை பச்சை குத்தலையா (அ)

அநுபல்லவி

உங்கள் சிவந்தமேனிக்குப் பழுத்தபச்சையும்
கருத்த மேனிக்குத் தகுந்தபச்சையும் (பச்)

குற:—அம்மா! பச்சைகுத்திக் கொள்ளவில்லையா, நல்லநல்ல பச்சை எல்லாம் குத்துவேனம்மா? கூடக்குறியும் சொல்லுவேன் கை ரேகையும் பார்த்துச் சொல்லுவேன்.

[அர்ச்சுனன் எதிரில் வருகின்றான் குறத்தியைப்பார்த்து]

### அர்ச்சுனன் குறத்தி தர்க்கம்

(இந்தநல்வேளை சுந்தரிபோல என்ற மெட்டு)

பார்வி-நோட்.

அர். மன்னன்யான்செல்லும்-மலைவழிதன்னில்
தன்னெதிர்நேரே-வந்தநீயாரு

குற. கைக்குறிபார்க்கும்-கானகக்குறத்தி
தையலைச்சேர்க்கும்-தான்வெகுதிறத்தி

அர். சொன்னசொல்லெல்லாம்-சோர்வடையாமல்
நன்மையதாகப்-பலிக்குமோகுறத்தி

குற. சொன்னசொல்லெல்லாம்-சோர்வடையாது
நன்மையதாக-நடக்குமே அய்யே

அர். அப்படியானல்-பேரென்னஊரென்ன
செப்படிகுறத்தி-ஒளியாமலிங்கு

அர். வ-ம்:—நல்லது; உன் நாமதேயமும் இருப்பிடமும் எது?

குற:—சொல்லறண்டா அய்யே.

## குறத்தி தரு கண்ணிகள்

### குறம்

இராகம்-பியாக், தாளம்-ரூபகம்.

எந்தனது திருநாடு-கேட்கிறாயோ தம்பி
ஏற்றமுள்ள இந்திரனூர்-வாழுமெங்கள் நாடு
சந்திரர்கள் சூரியர்கள்-தவம்புரியும் நாடு
தவமுனிவர் ரிஷிகளெல்லாம்-வாழுமெங்கள் நாடு
கொச்சிமலை குடகுமலை-எங்களது நாடு
குமரேசர் வாழுமது-எங்களது நாடு
வங்காளம் சிங்காளம்-மத்யமெங்கள் நாடு
வளம்பாடிக் குறியுரைக்க-வந்தேனடா தம்பி
பசிகால மானாலோ-பழங்கூறி வருவோம்
பரமசிவ னுமையவட்குங்-கைபார்க்குங் குறத்தி
ராமக்கா லட்சுமக்காள்-பொம்மக்கா ளென்பேர்
நலமறிந்து குறியுரைப்போம்-நட்டணையாய் நாங்கள் (எங்)

அர்:—ஏ குறத்தி! நல்ல குறி கூறுவாயா கேட்பது நினைத்தது எல்லாம் சொல்லுவாயா?

குற:—ஆமாண்ட அய்யே! எல்லாம் உள்ளபடி சொல்லுவேன்.

அர்:—(அர்ச்சுனன் தன் கரத்தைக் காண்பிக்கின்றான்.) ஏதோ என் கையைப் பார்த்துச் சொல்லு பார்ப்போம்.

குற:—சாமி வருந்திச் சொல்லனுண்டா அய்யே. சாமி வந்தா நீ பயந்திடுவே.

அர்:—பயப்படமாட்டேன் சும்மா சொல்லு.

[குறத்தி சொல்லுகின்றாள்]

இராகம்-பியாக், தாளம்-ரூபகம்.

### கண்ணிகள்

சந்திரகுலத் தரசர்களில்-தருமரைவர் நீங்கள்
தரணிமுழு தாளுகின்ற-தருமர் தம்பிநீதான்
சிலைநுதலான் வடிவழகன்-தேர்விஜயன் நீதான்
தீர்த்த யாத்திரைக்காகத்-திருமாலுடன் வந்தாய்
வடிவழகி சிலைநுதலாள்-தென்மதுரை வாழும்
பாதுமெல்லி அல்லியின்மேல்-மயக்கங்கொண்டாய் நீயும்
ஆறுயிரம்பாண்டியற்கு-அரியதுரைமகளாம்
அல்லியின்மே லாவல்கொண்டு-அலைகின்றாயேநீயும்
உண்மையா பொய்யாசொல்-யானுரைத்தவைகளெல்லாம்
உத்தமனே புகன்றிடுவாய்-இத்ததியே நீயும் (சங்)

அர்:—அம்மா! நீசொன்னதெல்லாம் உண்மையே நடந்ததை எல்லாம் நடந்தபடியே சொல்லிவிட்டாய் அல்லியென்று சொன்னுயே அந்த அல்லி எனக்குக் கிடைப்பாளா கிடைக்கமாட்டாளா? சொல்லு பார்ப்போம்.

குற:—எண்டா! அய்யே அந்த அல்லியைக் கிடைக்கும்படி செய்கின் றேன் எனக்கு என்னகொடுக்கின்ருய்?

அர்:—நீ கேட்டதெல்லாம் கொடுக்கின்றேன்.

குற:—நீ ரணிந்திருக்கு மாடையாபரணங்களெல்லாம் தருவாயா?

அர்:—இதுதானு! கட்டாயம் கொடுக்கின்றேன்.

குற:—அப்படியானுல், நான் மூன்று மாத்திரைகள் தருகின்றேன் அவைகளை அல்லிக்குளத்தில் கொண்டுபோய் அல்லி மெல்லி என்று நன்ருய் உரை மாத்திரை கரையக்கரைய அல்லி மன மானது இளகி வந்துவிடுவாள்.

அர். வ-ம்:—அல்லிதானே அவள் பெயர். மெல்லி என்று எதற்காகச் சொல்லவேண்டும்?

குற:—மெல்லி அவள்தோழியையே! தோழியுடன் தான் வருவாள்.

(கட்டிமுத்தமிட்டிடக் கல்லாயிருக்குதே என்ற மெட்டு)

அர். நன்மையானு லம்மருந்தை என்கரத்தில்-தா
குற. சொன்னுபோ லாபரண ஆடையாவுந்-தா
அர். அம்மருந் துதவாவிடில் என்னசெய்வது
குற. ஆடையா பரணவகை யான் கொடுப்பேனே

அர்:—சரி இம்மருந்து பலிக்காவிடில் என்ன செய்வது?

குற:—இம்மருந்து பலிக்காவிடில் உனது ஆடையாபரணங்களைத் திரும்பவும் உனக்குக் கொடுத்துவிடுகின்றேன்.

[அர்ச்சுனன் குறத்தியிடம் ஆடையாபரணங்களெல் லாம் கழட்டித்தர குறத்தி வாங்குகின்ருள்]

அர்:—ஏ குறத்தி! இரு மறந்துவிட்டேன் உனதிருப்பிட மறிந் துன்னை எவ்விதமாக அழைக்கவேண்டும்?

குற:—இதோ இருக்கும் நாலு மலைக்கு நடுவே எதிர் குடிசை என்னுடையது. அவ்விடம் வந்து ஏ ராமக்கா! ஏ லட்சுமக்கா! ஏ பொம்மக்கா! என்று கூவிக் குதிக்கவேண்டுமையே,

[குறத்தி குதித்துக் காட்டுகின்ருள்]

அர்:—குதிக்கவும் வேண்டுமோ?

குற:—ஆமாண்டே அய்யே, [குறத்தி மீண்டும் போகின்ருள்]

சீன்-10. இடம்-அல்லிக்குளம்.

## அர்ச்சுனன் மருந்துரைத்தல்

பாத்திரங்கள்-அர்ச்சுனன், அல்லியின் தோழிகள்

(குறத்திதந்த மாத்திரை என்ற மெட்டு)

இராகம்-இந்துஸ்தான், கமாசு, தாளம்-ஆதி.

### கண்ணிகள்

மாத்திரை யுரைக்கின்றேன் மருந்தினை யுரைக்கின்றேன்
குறத்திதந்த மருந்தினை ஜலத்திலேகலக்குறேன் (மா)

அல்லிமெல்லி யென்றுமே அலைகுறேன் வாய்மென்றுமே
சொல்லிநின்றுரைக்கின்றேன் அல்லியினும்காண்கிலேன் (மா)

அர்:—(அல்லிமெல்லி அல்லிமெல்லி என்று உரைக்கின்றான்) ஆஹா! எனது ஆசைநாயகியான அல்லி எனினும் வரவில்லையே. எப்போது உன்னைக் காணப்போகின்றேனோ?

[தண்ணீர் எடுக்கவந்த தோழிகள் அர்ச்சுனனைக் கண்டு அவன் சமீபத்தில் சென்று வினவுகின்றார்கள்]

தோழி:—என்னடி! யாரோ ஒருவன் நமது மகாராணியவர்களின் பெயரைச் சொல்லிக்கொண்டு கண்ணே, பெண்ணே, அல்லி மெல்லி என்று எதையோ உரைத்து ஜலத்தில் கலக்குகின்றானே, வாருங்கள் சமீபத்தில் சென்று விசாரிப்போம்.

[அர்ச்சுனன் அல்லியின்மீது மோகித்துப் பாடுதல்]

(தணிகைமேவுங் கந்தசாமி என்ற மெட்டு)

பல்லவி

கனகசுந்தராங்கி யல்லி-உன்னைக்
காணவேண்டுமென்று சொல்லி வந்தேன் (கன)

அநுபல்லவி

காண்டீபன் வந்தேனடி மெல்லி
கோமளவல்லி-காமியே யல்லி
கண்ணே பெண்ணே பொன்னே வாடி (கன)

சரணம்

தேடித் தேடியா னலைகுறேன் வாடி
மோடியேன் பெண்ணே முத்தந்தா கூடி
வாடியே மருந் துரைக்கிறேனடி
வாது செய்யாமல் வந்தெனக்கொரு
வஞ்சி மிஞ்சிக் கொஞ்சி முத்தங் கொடு (கன)

வ-ம்:—ஏ கனகசுந்தராங்கியே! காதல்மீறி அல்லி யல்லி என்று அலையும் எனக்கு இந்தவேளை நேரில்வந்து, நாதா! என்றழைத்து ஒரு முத்தந் தரக்கூடாதா?

தோ:—ஐயா தாம் யார்? எதற்காக இங்கு வந்தீர் சீக்கிரம் பதில் சொல்லும்.

(மாப்பிள்ளை வந்து நான் கூப்பிட்டு என்ற மெட்டு)

தோ. அல்லியல்லி யென்று சொல்லியே யிங்கனம்
மருந் துரைப்பவன் யாரடா

அர். அழகுநிறைந்திடு மல்லியின்பெயரைச்
சொல்வதா லென்ன கூறடி

தோ. இன்னுமொருதரம் கூறுவாயானு
விசேஷணம் தண்டனை யாகுமே

அர். தண்டனைசெய்திடு மல்லியைக்கண்டுயான்
அன்புடனேகூடிச் சேருவேன்

அர்:—ஏ பெண்மணிகாள்! உங்கள் ராணியாகிய அல்லிக்கு இவ்விஷயத்தைச் சொல்லி சீக்கிரமிங்கு அழைத்துவாருங்கள். நீங்கள் மட்டும் ஏன் தனியாய் வந்தீர்கள்?

தோ:—அடா! பயித்தியக்காரா இன்னு மொருதரம் இவ்வாறியம் பாதே மரியாதையாகச் சென்றுவிடு வாளுக்கிரை யாகாதே.

அர்:—எப்படியானுலும் சம்மதம் இவ்விடம்விட்டு அகலேன்.

தோ:—சேடிகாள்! சீக்கிரம் வாருங்கள் இதை நமது மகாராணியவர்களுக்குத் தெரியப் படுத்துவோம் இவன் மகா அயோக்கியன்.

[சேடிகள் சென்றுவிட்டார்கள்]

[அர்ச்சுனன் அல்லியை மணஞ்செய்து வைக்கும்படி
தன் மாமனுகிய கிருஷ்ண பகவானை வேண்டுகின்றான்]

## அர்ச்சுனன் தரு

(தினந்துதிப்பாய் நெஞ்சே ஸ்ரீரெகு ராமனை என்ற மெட்டு)

இராகம்-செஞ்சுருட்டி, தாளம்-ஆதி.

பல்லவி

அனுக்ரகம் செய்மாமா அல்லியைக் கல்யாணஞ்செய்ய
அல்லியைக்கல்யாணஞ்செய்ய என்னுயிர் மீண்டுமே உய்ய (அ)

அநுபல்லவி

கோவர்த்தன கிரியைக் குடையாய்ப் பிடித்தவண்ணு
குடையாய்ப் பிடித்தவண்ணு கோவினம் மேய்த்தகண்ணு (அ)

பற்குணன் சகாயனே பாற்கடல் துயின்றேனே
பாற்கடல் துயின்றேனே பால கோபாலனே (அ)

அர்:—மாமா! பரந்தாமா! இன்னுமென்னை இவ்வாறு சோதிக்கலாமா? கல்யாணத்திற்குக் கருணைபுரிய லாகாதா? காண்டீபன் கலங்குகின்றான் என்று கவலையில்லையே.

[அர்ச்சுனன் குளக்கரையில் மருந் துறைத்துக் கொண்டு புலம்பிக்கொண் டிருக்கின்றான்]

## சீன்-11. இடம்-அல்லியரண்மனையில் தர்பார்மண்டபம்.

பாத்திரங்கள்-அல்லி, தோழிகள்.

அல்:—தோழிகாள்! ஏன் முகவாட்டத்தோடு வந்திருக்கின்றீர்கள்?

### தோழிகள் தரு

(கும்மிமெட்டு அல்லது எட்டடிக் குச்சிக்குள்ளே என்றமெட்டு)

பொன்னின் குடமெடுத்து-நாங்கள் போனேஉம் குளக்கரைக்குத்
தண்ணீரிலொருவன் மருந்தைத் தானுயுரைக்க லுற்றான்
அல்லியல்லி யென்றுமருந்தை அரைக்கின்றான் குளத்தில்
சொல்லியும் பார்த்தோமம்மா துஷ்டன்தொலைகின்று னில்லையம்மா

தோ:—அம்மணி! இன்று வழக்கம்போல் தாம் பிறந்த அல்லிக் குளத்திற்கு ஜலங்கொண்டு வரப்போனேஉம், யாரோ ஒருவன் தங்கள் பெயரைச் சொல்லிச்சொல்லி ஏதோ மாத்திரைகளை ஜலத்தில் கரைக்கின்றான். என்ன சொன்னுலும் கேட்கவில்லையம்மணி.

[இச்செய்தியைச் செவியுற்ற அல்லி அதிக ஆங்காரத்துடன் துள்ளி எழுந்து]

### அல்லி தரு

(ஸ்ரீராமச் சந்திரனே என்றமெட்டு)

என் பெயரைச் சொல்லி யல்லி
குளத்தினில் மருந்துரைக்கும்
கொடிய பாதக னவன் யாரடி
யாரடி கண்டு தேடடி (என்)

வஞ்சகம் நெஞ்சினில் கொண்டு
அஞ்சாம லெந்தனைக் கண்டு
போகவேண்டுமென்று சொல்லி வந்தானு
போங்கடி தேடி வாங்கடி (என்)

அல்:—சேடிகாள்! அவன் எங்கிருந்தாலும் சரி இக்ஷணமே அவனைக் கொண்டுபோய் வைகையாற்றில் சுடுமணலில் போட்டு உருட்டுங்கள்.

தோ:—நல்லதம்மணி! உத்திரவின்படியே செய்கின்றோம்.

[போகின்றார்கள்]

சீன்-12. இடம்:—வைகையாற்றின் மணற்பாகம்.

பாத்திரங்கள்-அர்ச்சுனன், தோழிகள்.

தோ:—ஐயா! எழுந்து எங்கள் கூடவாரும் அல்லி அங்குவந்து உம்மைச் சேருவாள்

அர்:—நல்லது வாருங்கள் போகலாம்.

[தோழிகள் அர்ச்சுனனை ஆற்றுமணலில் கொண்டு போய்நிறுத்த கிருஷ்ணன் சகாயத்தால் அர்ச்சுனனுக்குக் குளிர்ச்சியும் இளங்காற்றும் வீசுகின்றது. தோழிகளுக்கு மாத்திரம் வெய்யில் அக்கினி போல் கொதிக்கின்றது.]

தோ:—என்னடி செங்கமலம்! நம்மால் ஒன்றும் முடியவில்லையே. நிற்கவும் கூடவில்லையே. இவன் எப்படி நிற்கிறுண்டி? சந்தோஷமாய் இருக்கின்றானே. [என்று ஓடுகின்றார்கள்.]

அர்:—பெண்மணிகாள் எங்கே ஓடுகின்றீர்கள். அல்லி எங்கே, வரக் காண்கிலேனே.

(நிற்கநிற்கச் சொக்குதெந்தன் என்ற மெட்டு)

இராகம்-தோடி, தாளம்-ஆதி.

கண்ணிகள்

நாணுசை கொண்டமாது அல்லி வருவாளோ
வந்தெனைச் சேர்ந்தொரு முத்தந் தருவாளோ
எந்தனையும் இங்கு விட்டு ஓடாதீர்-நான்
சொந்தமடி வேறென்று நீ ரெண்ணுதீர்
ஆற்று மணலி லிருந்தாளல்லி வருவாளோ-வந்து
அணைந்துமே காம சுகந் தருவாளோ

அர்:—மாதர்காள்! உங்கள் ராணியாகிய அல்லியை நினைத்து நினைத்து என்மனது நெருப்பிலிட்ட நெய்யதுபோல் உருகி வாடுகிறேனே, போய்ச் சீக்கிரம் வரச்சொல்லுங்கள்.

தோ:—என்னடி! நம்முடைய கால்கள் சூடு பொறுக்க முடியவில்லை. இவன் சந்தோஷமாய்க் குதிக்கின்றானே, ஐயா நீர் இங்கேயே இரும் அல்லியை நாங்கள் அழைத்து வருகின்றோம்.

[போகின்றார்கள்]

சீன்-13. இடம்-அல்லியின் கொலுமண்டபம்.

பாத்திரங்கள்-அல்லி, தோழிகள்

அல்:—சேடிகாள்! என்ன விஷயம்?

தோ:—அம்மணி! தங்க ளுத்திரவைப்போல் அவனைக் கட்டி ஆற்று மணலில் உருட்டினோம், ஒன்றும் பலிக்கவில்லை. நாங்கள்தான் துன்புற்றோம், அவன் தங்கள் பெயரைச் சொல்லிச் சொல்லி ஆடுகின்றான்.

அல்:—செங்கமலம்! நீங்கள் கூறுவ துண்மைதானா? என்ன அதிசய மாய் இருக்கின்றது. நல்லது,

(தாரதிலாரா திலபருகே என்றமெட்டு)

கண்ணிகள்

சேனைக்கதிபதி சேடியேநீ
செங்கமல மிங்கு வந்திடுவாய்
பலமுடனவனையே நமது காவலுடன்
கொலை செய்வீர் இன்று கொலை செய்வீர்
கொண்டுமே சீக்கிரம் பதில் சொல்வீர் (சே)

அல்:—தோழிகாள் சீக்கிரம் அவனை அழைத்துக்கொண்டு போய் தூக்கி விடுங்கள்.

தோ:—அம்மணி தங்கள் உத்திரவுப்படியே. [போகின்றார்கள்]

சீன்-14. இடம்-மதுரைக் கொலைக்களம்.

பாத்திரங்கள்-அர்ச்சுனன், தாதிகள்.

அர்:—பெண்மணிகாள்! ஏன் இவ்வளவு தாமதம்? எனதருமை நாயகி யாகிய அல்லி எங்கே? ஏன் வரவில்லை?

[தாதிகள் தூக்கு மரத்தைக் காட்டி]

தோ:—ஐயா இந்த மரத்தின் மீதேறி அதில் தொங்கும் கயிற்றை எடுத்துக் கழுத்தில் மாட்டிக்கொண்டு நின்றால் அல்லி இங்கு வருவாள். ஏறி நில்லும்.

அர்:—சேடிமார்களே! இதெல்லாம் எனக்குத் தெரியாது. உங்களில் எவரேனும் முதலில் செய்து காண்பித்தால் யானும் அவ்வண்ணமே செய்கின்றேன்.

செங்:—என்னய்யா! புதுமையாக இருக்கின்றதுநீரா ஒரு ஆண்பிள்ளை இதோ என்னைப்பாரும்.

[என்று சொல்லிக்கொண்டு தூக்குமரத்திலேறிக் கழுத்தில் கயிற்றைமாட்டி நிற்க கிருஷ்ணன்சகாயத்தினால் செங்கமலம் இறந்து போகின்றாள்]

அர்:—(கைகொட்டிப் பாடுகின்றான்)

(நல்வாக்கு நீகோடடி என்ற மெட்டு)

**கண்ணிகள்**

நல்லூஞ்சலாடாதடி எந்தன் நாரியேயிறங்கிவாடி
சொல்லியேநீ மேலேநின்று சுகமாக ஆடாதடி (நல்)

கண்ணைச் சுழட்டாதடி பெண்ணே கைகாலுதறாதடி
நாவைப்பிதுக்காதடி பாவையல்லி பெங்கேயடி (நல்)

அர்:—பெண்காள்! ஏன் இன்னும் இவள் கீழிறங்கவில்லையே; நான் எப்போது இதுபோல் நிற்பது? என தருமைக்கண்மணி அல்லி எப்போது என்னைக்கூடி ஆலிங்கனம் செய்வது?

[இதைக்கண்ட பவளசேனு மற்றதாதிகளை அழைத்துக்கொண்டு அல்லியிடம் செல்கின்றாள்]

**சீன்-15. இடம்:—அல்லியின் கொலுமண்டபம்.**

பாத்திரங்கள்-அல்லி, தோழிகள்.

அல்:—சேடிகாள்! ஏன் முகவாட்டத்துடன் வந்து நிற்கின்றீர்கள்?

தோ:—அம்மணி! தாங்கள் சொன்னபடி அப்பாதகனைத் தூக்குமரத்திற்கருகில் கொண்டுபோய் நிறுத்தி ஏறி நிற்கும்படி சொன்னோம்; அவன், எனக்குத் தெரியாது உங்களில் யாரேனுமொருவர் முதலி லேறிக் காண்பித்தால் அதன்படி செய்வதாகச் சொன்னான். செங்கமலம் ஏறி நின்றாள் பலகை ஒடிந்து கழுத்தில் கயிறு மாட்டினபடியே தொங்கி இறந்துபோனாள்.

[என்று சொல்லி அழுகின்றார்கள்]

அல்:—ஆ! செங்கமலம், இறந்துபோனாள்?

(நல்வாக்கு நீ கொடடி என்றமெட்டு சோகமாகப்பாடவும்)

தரு

செத்து மடிந்தனளோ-செங்கமலம்
சிவலோகஞ் சேர்ந்தனளோ
மாண்டு மடிந்தனளோ-அந்த
மாபாவி துஷ்டனாலே (செ)

வ-ம்:—பவளசேனு! அச் சண்டாளனை அழைத்துக் கொண்டுபோய் காளிகாதேவி ஆலயத்தின்முன் நிறுத்திப் பலியிட்டு வாருங்கள். இனி யாதொன்றுஞ் சொல்லக்கூடாது, சீக்கிரம் போய் வாருங்கள்.

தோ:—நல்லது அம்மணி! அப்படியே செய்கின்றோம்.

சீன்-16. இடம்-காளி கோவில்.

பாத்திரங்கள்-அர்ச்சுனன், தோழிகள்.

தோ:—(அர்ச்சுனனை ஆலயத்தின் முன் நிறுத்தி) ஏ ஜெகதீஸ்பரி ஜெகத் தரக்ஷகி எங்கள் மகாராணி அல்லியின் கட்டளையின்படி இந்த நரபலியை ஏற்றுக்கொள்ள வேண்டும் தாயே மகமாயி.

[என்று சொல்லி வாளை ஓங்குகின்றாள்]

காளி:—ஏபெண்களே! உங்களரசிக்கு எப்படி ஆண்வாடை யாகாதோ அதுபோ லெனக்கும் ஆண்பலி கூடவே கூடாது. உடனே அழைத்துச் செல்லுங்கள். [தோழிகள் போகிறார்கள்]

சீன்-17. இடம்-அல்லியின் கொலுமண்டபம்.

பாத்திரங்கள்-அல்லி, தோழிகள்.

அல்:—சேடிகாள்! என்ன விஷயம் தொலைந்தானு பாவி.

தோ:—அம்மணி! தங்களுக்கு எப்படி ஆண் வாடை கூடாதோ அது போல் எனக்கும் கூடாதென்று ஆலயத்தில் உத்திரவாயிற்று.

அல்:—இதென்னடி! ஆச்சர்யமா யிருக்கின்றதே.

அல்லி தரு

இராகம்-மோகனம், தாளம்-சாப்பு.

மாயாஜாலவித்தை கற்றவனே
மந்திரந்தந்திரம் செய்பவனே
கானில்கதைசொல்லிச் சென்றவனே
கண்டிக்கவேண்டுமே அந்தவனை (மா)

அல்:—சேடிகாள்! இப்பொழுதே அவனைப் பூதக்கிடங்கில் கொண்டு போய்த் தள்ளி பூதங்களுக்கு இரையாகும்படி செய்யுங்கள்.

தோ:—நல்லதம்மணி! அப்படியே செய்கின்றோம்.

[போகின்றார்கள்]

சீன்-18. இடம்:—பூதக்கிடங்கு.

பாத்திரங்கள்-அர்ச்சுனன், பூதங்கள், தோழிகள்

[கிருஷ்ணமூர்த்தியின் உத்திரவின்படி அர்ச்சுனனைப் பூதங்கள் தூக்கி ஆடுவதும் அவனுக்கு ஏவல்செய்வதுமாய் இருப்பதைக்கண்ட தோழிகள் அல்லியிடஞ்சென்று முறையிடுகின்றார்கள்]

தோ:—என்னடி! இவன் எதற்கும் அஞ்சாமல் நம்கூடவே அலைகின்றானே? வாங்கடி மகராணியிடம் சொல்லலாம்.

[போகின்றார்கள்]

சீன்-19. இடம்-அல்லியின் தர்ப்பார் மண்டபம்.

பாத்திரங்கள்-அல்லி, தோழிகள்.

[கிருஷ்ணன் மெல்லிவேடம் புனைந்து அர்ச்சுனனைத் தேடி அல்லியின் சபைக்கு வருதல்]

மெல்லி தேடி வருதல்

(அம்பா மதுரைமீனுக்ஷி என்ற மெட்டு)

இராகம்-தேசிகம், தாளம்-ஆதி.

அருமை மணவாளனைத் தேடி-நான்
அவனியெல்லாந் திரிந்தோடி-வந்தேனென்
மேனி நொந்து வாடி
அவரை யிங்கு தேடி
அவரை யிங்கு தேடி (அ)

சகோதரி நாங்களிரு பேரு-வேளை
யாதரித்துப் பதில் கூறு
துவாரகா புரியென் னூரு
துன்பந் தன்னைத் தீரு
துன்பந் தன்னைத் தீரு (அ)

[தன் கணவனைத் தேடிவரும் மெல்லியைத் தோழிகள் அழைத்துக்கொண்டு அல்லியிடம் விடுகின்றனர்]

அல்:—பெண்ணே! நீ யார்? ஏன் இவ்விதம் புலம்பிவந்தாய்?

மெல்:—அம்மா! என் தலைவிதிப்பயனை என்ன சொல்லுவேன்!

## அல்லி தரு

(தந்திடுவீர் என்றமெட்டு)

அல்:—உன் பெயர் சொல்லடி.
மெல்:—என்பேர் மெல்லி என்பார்.
அல்:—இங்கு ஏனே வந்தாய்?
மெல்:—நாதன் தன்னைத்தேடி.
அல்:—நாதன் செய்கையென்ன?
மெல்:—நானே சொல்வேனம்மா.
அல்:—நல்லது சீக்கிரம் சொல்லுவாய்?

(நடந்ததென்ன சொல்லம்மா என்றமெட்டு)

இராகம்-நாதநாமக்கிரியை, தாளம்-ஆதி.

## மெல்லி தரு

பல்லவி

புகலுவேன் கேளம்மணி-எந்தன்
புதுமையைப் பாரம்மணி (புக)

அநுபல்லவி

இஷ்டமா யென்னையே மாங்கல்யம் முடித்து
என் தங்கை யல்லியின்மே லாசையாய்த் துடித்து
மங்கை எந்தன்கணவன் என்னைத் தனிவிடுத்து
தங்கைமே லாசையாய்த் திரிகின்றுரூரடுத்து (புக)

மெல்:—அம்மணி! நானிருப்பது துவாரகாபுரி என்பெயர் மெல்லி என் தங்கைபெயர் அல்லி. அதிகரூபலாவண்ய முடையவள், என் கணவர் என்தங்கையாகிய அல்லியின்மே லாசைகொண்டு, புத்திமயங்கி வீட்டைவிட்டு வெளியேறி எப்பொழுது பார்த்தாலும் அவள் பெயரைச் சொல்லிக்கொண்டு; தண்ணீர்கண்ட இடங்களெல்லாம் கல்லையும் மண்ணையும் எடுத்து அல்லி அல்லி என்று உரைத்துக்கொண்டே அலேவார். அவரை எங்குதேடியும் காணுது இங்கிருப்பதாகக் கேள்வியுற்று இவ்விடம் வந்தேனம்மா.

## அல்லி தரு கண்ணிகள்

இராகம்-இந்துஸ்தான்கமாசு, தாளம்-சாப்பு

என்நாமம் சொன்னதினுல்
உன்னுதன் தன்னைஎன்னுல்

துன்பம் விளக்கும்பூதக்
கிடங்கிற் போடவேசொன்னேன்
அவனைக்கூட்டிக் கொண்டுசெல்
அவனைக்கூட்டிக் கொண்டுசெல்
அவனைக்கூட்டிக் கொண்டுசெல்

அல்:—பெண்பாவாய்! என் நாமதேயம் வகித்தபெண்ணும் இப்பூவுலகில் ஒருத்தி இருப்பதாக உன்னால் தான் இன்று கேள்வியுற்றேன். என் பெயரைத்தான் சொன்னானென்று அவனைப் பூதக்கிடங்கில் அடைத்து வைத்திருக்கின்றேன். அங்குச் சென்று அவனை யழைத்துக்கொண்டு போ. பவளசேனா நீயும் கூடவே சென்று அவனை விடுவித்துவிட்டு வா. போ சீக்கிரம்.

[அர்ச்சுனன் பூதத்தினிடத்திலிருந்து விடுபட்டு அல்லியை நினைத்துக்கொண்டு கிருஷ்ணன் சயனித்திருக்கு மிடத்திற்கு வருகின்றான்.]
[அருச்சுனன் பாடிக்கொண்டே போகின்றான்]

(பருவ காலத்தை வீணாய் என்ற மெட்டு)

இராகம்-பிலஹரி, தாளம்-ரூபகம்.

மாரன் விடுங்கணைகள் மார்பைப்பிளக்குதடி அல்லி அல்லி-உன்
மனமோ கருங்கல்லடி கலங்கி யுருகுறேண்டி அல்லி அல்லி
உன்னாலே யல்லவோ உற்றாரை யான் மறந்தேன் அல்லி அல்லி
தன்னாலே வராயென்று தயங்கித் திரிகிறேண்டி அல்லி அல்லி (மா)

## சீன் .20. இடம்-மதுரையை யடுத்த ஓர் பாகம்.

பாத்திரங்கள்-கிருஷ்ணன், அர்ச்சுனன்.

[கிருஷ்ணன் நித்திரை செய்கின்றார்.]

[அர்ச்சுனன் பகவான்சிரசை முன்போல் தன் துடைமேல் எடுத்து வைத்துக்கொண்டு]

அர்:—மாமா! மாமா! என்ன இவ்வளவு நேரம் தூக்கம் என்துடையும் நோகின்றதே எழுந்திருங்கள். (கிருஷ்ணன் எழுந்து)

கிரு:—காண்டீபா! இன்று ஏதோ அயர்ந்து நித்திரைசெய்ததுமன்றி, கெட்ட சொற்பனங்களும் மல்லவா? கண்டேன்.

அர்:-(தனிமொழி) நாம்போய் வந்தவிஷயமும், நான்பட்ட கஷ்டமனைத்தும் தெரியுமா? தெரியாது நான் வருஞ்சமயம் தூங்கிக்கொண்டு தானே இருந்தார். (கிருஷ்ணனைப்பார்த்து.)

அர்:—மாமா கனவா! எல்லாம் நினைவுதான் மாமா! மாமா கல்யாணம் மேலும் தங்களுக்குப் பித்தவுடம்பு பித்தமதிகரித்ததினுல் தான் இம்மாதிரி சொற்பனங் கண்டீர்.

கிரு:—மைத்துனு! அப்படியும் இருக்குமோ? நல்லது; நீ அணிந்திருந்த.

## கிருஷ்ணன் தரு

(நல்வாக்கு என்ற மெட்டு)

அணிபணி யாடையெங்கே-என்
சொற்பனமும் பொய்யோயிங்கே
பொய்யோ நான் சொல்வதானுல்-இந்த
வையகமு மேசாதோடா (அணி)

காதில் குண்டல மெங்கே-உன்
காப்புமோதிர மெங்கே
சல்லா வுருமா லெங்கே-உன்
சரிகைபோட்ட வேஷ்டியெங்கே (அணி)

கிரு:—மைத்துனு! எங்கே இவைகளை, நான் கண்ட கனவு உண்மைதானு இல்லையா?

அர்:—எல்லாம் உண்மைதான் மாமா! எனது ஆடை ஆபரணங்கள் எல்லாம் ஒரு குறத்தியிடம் கொடுத்துவிட்டேன். மன்னியுங்கள். மாமா! கல்யாணம்;

கிரு:—உனது ஆடையாபரணங்களை எல்லாம் வாங்கிக்கொண்டுவந்தால்தான் கல்யாணம்.

அர்:—மாமா! இதோ போய் வாங்கிக்கொண்டு வருகின்றேன்.

[போகின்றுன்]

## அர்ச்சுனன் தரு

(சிலம்போ சிலம்பு என்றமெட்டு)

என்னை யேமாற்றி மோசம் செய்துவந்த
ராமக்கா ராமக்கா ராமக்கா
பலிக்குமென்று சொல்லி ஜொலிக்கு மாத்திரை தந்த
ராமக்கா ராமக்கா ராமக்கா
உன் மருந்து பலித மில்லையே
ராமக்கா ராமக்கா ராமக்கா

குற:—யாரடா அய்யே! எனைக் கூப்பிட்டது?

அர்:—நான்தான். உன் குளிகை பலிக்கவில்லை; எனது ஆடை யாபரணங்களை எல்லாம் கொடுத்துவிடு.

குற:—அதெப்படி அய்யே! கொடுக்கிறது. மாத்திரைக்கும் உன் நகைகளுக்கும் சரியாய்ப் போச்சுடா அய்யே! போய்விடு என் அண்ணன்மார்கள் வருகின்றார்கள். [குறவர் வருகின்றார்கள்]

அர்:—யார் வந்தாலும் இவ்விடம் விட்டுப் போகேன். ஆடையாபரணங்களைக் கொடு.

குற:—அடே யப்பா! இதோ உன் நகைகள். இங்கு நிற்காதே ஓடிப்போ.

[அர்ச்சுனன் குறத்தியிடம் சென்று ஆடை யாபரணங்களை வாங்கி வருகின்றான்.]

அர்:—மாமா! இதோ வாங்கிவந்து விட்டேன். இனியாவது கல்யாணம் மாமா.

## அர்ச்சுனன் விருத்தம்

(ஆனந்த பைரவி)

கண்ணே கமலக்கண்ணா கார்த்திடு மடியார் தம்மை
எண்ணம்நீர் தெரிகிலீரோ ஏந்திழை அல்லிமாதை
திண்ணமாய் யெனக்குத்தானே திருவருள் கொண்டுமணம்
உண்மையாய் செய்துமகிழ்வா யென் றுரைத்தேன்மாமா

கிரு:—பற்குணா! நீ ஒரு அழகிய பாம்பு உருவம் எடுத்துக்கொள். நான் பாம்புப் பிடாரனாகி அல்லியிடம் உன்னைச் சேர்க்கின்றேன். உனது எண்ணத்தைப் பூர்த்தி செய்துகொள்.

அர்:—நல்லது மாமா! அப்படியே ஆகட்டும்.

**சீன்—21.** **இடம்—மதுரை நகர்வீதி.**

பாத்திரங்கள்-பாம்புப்பிடாரன், அல்லி, தோழிகள்

[கிருஷ்ணன் அர்ச்சுனனைப் பாம்பாக்கி தான் பிடாரனாகி ஆட்டிக் கொண்டிருக்கிறான்]

## பாம்புப் பிடாரன் தரு கண்ணிகள்

ஆடுபாம்பே தெளிந்தாடு பாம்பே-அரன்
அடியிணை கண்டோமென் றாடுபாம்பே
தெளிந்து தெளிந்து தெளிந் தாடுபாம்பே-சிவன்
சீர்பாதங் கண்டோமென் றாடுபாம்பே (ஆடு)

அல்லிக்குப் பாற்குடம் கொண்டுபோகும் பெண்கள் குடத்தை இறக்கிக் கீழே வைத்துவிட்டு, பாம்பு ஆடுவதைப் பார்த்துக்கொண்

டிருந்தார்கள். அவ்வேளை பாம்பு குடத்திலுள்ள பாலை முழுவதும் குடித்துவிட்டது.

[பெண்கள் முகவாட்டத்துடன் அல்லியிடம் போகின்றார்கள்]

**சீன்-22. இடம்-அல்லியின் தர்ப்பார்.**

பாத்திரங்கள்-அல்லி, தோழிகள், பாம்புப்பிடாரன்

அல்:—சேடிகாள்! ஏன் முகவாட்டத்துடன் வந்து நிற்கின்றீர்கள்?

சேடி:—அம்மணி! நாங்கள் வரும்வழியில் ஒரு பாம்புப்பிடாரன் பாம் பாட்டிக் கொண்டிருந்தான். குடங்களைக் கீழே வைத்துவிட்டு வேடிக்கைப் பார்த்துக்கொண்டிருந்தோம். அந்தப் பாம்பு எங்களுக்கும் தெரியாமல் பாலை எல்லாம் குடித்துவிட்டுக் குடங்களை உருட்டிவிட்டது.

### அல்லி விருத்தம்—(கேதார கவளம்)

பாற்குடம் போனதென்று பதறவே வேண்டாம்நீங்கள்
நேர்த்தியா யாடுஞ்சர்ப்பம் நிகரற்றுக் குடித்ததாலே
பூர்த்தியாய்க் காணஆவல் அதிகமா யிருப்பதாலே
பார்க்குளோ ரறிந்திடாமல் பாவையே யழைத்துவாரீர்.

அல்:—நல்லது; தாதிகாள்! பாற்குடம்போனல் போகட்டும். அப் பிடாரனை இங்கு அழைத்து வாருங்கள்.

[போகின்றார்கள்]

தாதி:—ஓய் பாம்புப்பிடாரா! உன்னை எங்கள் மகாராணியம்மா ளழைத்து வரும்படி சொன்னார்கள். வா போகலாம் எழுந்திரு.

பா-பி:—என்னாத்துக்குத் தாயே! மவாராணி அம்மாக்க கூப்புட்டாங்க?

தா:—வாடா என்றால், எதற்கு என்று கேட்கின்றாயே. நல்ல இனமளிப்பார்கள் வா.

பா-பி:—நல்லதம்மா! வாங்கோ போகலாங்கோ.

[அல்லியிடம் போய்]

தா:—அம்மணி! இதோ பாம்புப்பிடாரன் வந்திருக்கின்றான்.

அல்:—நல்லது; இங்கு அழைத்துக்கொண்டு வாருங்கள். (பிடாரன் வருகின்றான்) ஏ பிடாரா! நீ எத்தனை விதமான பாம்புகள் வைத்திருக்கின்றாய்?

பா-பி:—அம்மணி! (ஒவ்வொன்றாய்க் காண்பிக்கின்றான்.) இது மாணிக்கப் பாம்பு, இது சாரைப்பாம்பு, இது நல்ல பாம்பு, இது பச்செ

பாம்பு, இது தண்ணீப்பாம்பு இன்னும் ரெம்ப ரெம்ப விதமான பாம்புகள் இக்குது அம்மணி! (ஷெ வசனத்தைப் பிடாரன் போல் பேசவும்.)

அல்:—ஏ பிடாரா! அந்த மாணிக்க நாகத்தை ஆடும்படி செய் பார்க்கலாம்.

பா-பி:—அம்மா! பாருங்கோ அம்மா! இந்தப் பாம்பு ரொம்ப கெட்ட பாம்பு எடுத்துவிட்டா இது பாருங்கோ பொம்பளேங்க பார்த்து ஏறும். என் தங்காச்சி வளர்த்த பாம்புங்கோ அதான் அப்படி பொம்பளே மேலே ஏறுங்கம்மணி. வேண்டாங்கோ.

அல்:—பிடாரா! பாதகமில்லே; சும்மா ஆடும்படி செய். நாங்கள் ஜாக்கிரதையாய் இருப்போம்.

பா-பி:—நல்லதம்மா (பாம்பு ஆட்டுகின்ருன்) ஏ நாகப்பா, நாகப்பா! புர், புர் கோவோம் வேண்டாப்பா!

மோடி

ஆடுபாம்பே தெளிந்தாடு பாம்பே
ஆடுபாம்பே கூத்தாடு பாம்பே
ஆடுபாம்பே ராணியைப் பாருபாம்பே
ஆடுபாம்பே இன்று கூடுபாம்பே (ஆ)

அம்மணி னடியிணே
கண்டோ மென்றிங்கனம் (ஆ)

பா-பி:—ஏ நாகப்பா! அம்மாங் கிட்டப் போவாதேடா.

அல்:—சேடிகள்! இப்பாம்பு என்னவிதமாய் ஆடுகின்றது பார்த்தீர்களா! இதை விலேக்கு வாங்கி நாம் வளர்ப்போமா?

சேடி:—நல்லதம்மணி! தங்களிஷ்டம்.

அல்:—ஏ பிடாரா! இந்தப் பாம்பை எங்களுக்குக் கொடுத்துவிட்டு வேண்டிய திரவியம் வாங்கிப் போ.

பா-பி:—அம்மேய்! இதே விலேக்கி இல்லே அம்மே! எங்க தங்காச்சி வளர்க்கின்ற பாம்பு அம்மே! இது இல்லாமே போனுல் தங்காச்சி இராத்திரிக்கித் தூங்கமாட்டா அம்மே! வவுறு பிளேக்கினு மம்மே. கோவா வேண்டாமம்மே!

அல்:—அடே பிடாரா! உனக்கு விலேக்குக் கொடுப்பதற்குச் சம்மதமில்லாவிடில் இன்று இரவுமட்டும் இருக்கட்டும். வேண்டிய ஆடையாபரணங்கள் தருகின்றேன். உன் தங்கையிடம் கொடுத்துச் சந்தோஷப் படுத்திக்கொள்; நாளேக் காலேயில் வந்து வாங்கிப்போ.

## பாம்புப்பிடாரன் தரு

(பூவருந்திருவே என்ற மெட்டு)

மெலிந்து போகுமம்மா-பாம்பு
நலிந்து போகுமம்மா
என்ன செய்தாலு மன்ன முண்ணாது
பன்னகம் ராவில் படுத் துறங்காது (மெ)

வ-ம்:—அம்மணி! இப்பாம்பு பாருங்கோ ராவுலே சும்மா தூங்காது, மார்மேலே, தோள்மேலே எல்லாமேறி விளையாடும். பாம்பு மெலிந்து வாடிப்போகு மம்மே!

## அல்லி தரு

(நிச்சயமாய்த் தீர்க்கக்கடன் என்றமெட்டு)

இராகம்-தன்யாசி, தாளம்-ஆதி.

பல்லவி

மெலியாதிருக்சப் பாம்பு சலியாமலே யுணவு
சமைத்துத் தருவேன் வினவு

அநுபல்லவி

எடை குறந்ததானால் தடையில்லாமல் பொன்னை
தருகிறேனச்சம் வேண்டாம் தயங்காதே சென்றுவாடா
தயவு செய் மயங்காதே (மெ)

அல்:—பிடாரா! சும்மா என்னிடந்தா னிருக்கட்டும், மெலிந்து போனால் குறையை நிறைசெய்து தருகின்றேன். சேடிகாள்! இவனுக்கு வேண்டிய ஆடையாபரணங் கொடுத்தனுப்புங்கள்.

தாதி:—நல்லது; அப்படியே.

[போகின்றார்கள்]

பா-பி:—ஏ நாகப்பா! நா போய்வாரேன். இன்று ராத்திரி மகாராணி அம்மாளைப் பாரப்பா.

[பாம்புப்பிடாரன் போய்விடுகின்றான்]

## சீன்-23. இடம்-அல்லியின் படுக்கையறை.

பாத்திரங்கள்-அல்லி, பாம்புருவெடுத்த அர்ச்சுனன்.

[அல்லி சர்ப்பத்துடன் விளையாடிவிட்டு அயர்ந்து தூங்க, அர்ச்சுனன் சுய ரூப மெடுத்து அல்லியோடு சேருகின்றான்]

அர்:—ஆஹா! நமதாசை நாயகியானவள் நித்திரை செய்கின்றாள். நாம் சமீபத்தில் சென்று லொருவேளை விழித்துக்கொண்டால் என்ன நேருமோ, தூக்கம் தூங்க மாமனாகிய மாயவனை நினைக்க லாம்.

## அர்ச்சுனன் தரு

(முத்திநெறி யறியாத என்றமெட்டு)

கண்ணிகள்

பரந்தாமா என்மாமா
பணிந்தேனருள் புரிமாமா
பாக்கியவதி யல்லிதன்னை
யோக்கியமுடன் கலந்தணைய (பர)

பெருந்தூக்கம் தான்கொடுத்து
விழிக்காமல் நீர்தடுத்து
கன்னியைநான் கரம்பிடித்துக்
கலந்தணைய கருணைசெய்வாய். (பர)

அர்:—ஏ! பரந்தாமா! கோபாலா! என்காரியம் முடிவுபெறும் வரை எனதருமைக் கண்மணி, தூக்கத்திலிருந்து எழாதிருக்கும்படி கருணை பாலிக்கவேண்டும்.

## அர்ச்சுனன் தரு

(ஆலோலமென்று கூவுறாள் என்ற மெட்டு)

இராகம்-கமாஸ், தாளம்-ஆதி.

அயர்ந்து-நித்திரை-செய்கிறாள் அல்லியோவேளை (அ)

கொடிபோ-லிடை-யுடையாள்
கோதைத்-துடிமதிவதனு-யிவள் (அ)

அர்:—ஆஹா! எனதருமைக் காதலியான அல்லி நாயகி அயர்ந்து நிததிரை செய்கின்றாள். (மஞ்சத்தின் சமீபத்தில் நின்று உற்பார்த்து)

(ஷை மெட்டு)

ஜெகத்தை மயக்குஞ்-சிங்காரி இகபர-வொய்யாரி (ஜெ)

தகத்தக-தகவென திமித்திமி-திமியென
தான்ஜொலித்திடு மஞ்சத்தின்-மீதிவள் (அ)

அர்:—கண்மணி! காதற்கிளியே! காமக்களஞ்சியமே! நீ சையனித்திருக்கும் மஞ்சம் என்ன ஒளிவீசுகின்றது. அடி என் ஆசைக்கிசைந்த பாண்டியன் குமாரியே! ஆண்வாடையே ஆகாதென்ற அன்னமே! உன் யௌவர்ன வயதைப் பார்த்துக் காண்டீபனான யான் கண்கலங்கி நிற்பதுகூடத் தெரியவில்லையே. (என்று சொல்லிக்கொண்டு முத்தமிடுகிறான்.)

(ஷ மெட்டு)

ஆண்வாடை யாகா தென்றிவள்
அரசு செய்தாள் (ஆண்)

முல்லை செண்பகம் ரோஜா பாதிரி
பரிமள சந்தனக் கதம்பமும்-பூசியே (அப)

வ-ம்:—ஏ சிங்காரவதனி! ஆண்வாடை யாகாத உனக்கு மன்மதனை வரவேற்கும் வாசனைத் திரவியங்களை ஏன் பூசித் தூங்குகின்றாய்? என்ன அழகு, என்ன ஒய்யாரம், இவளை வர்ணிக்க வாயும் போதாது.

[தனி மொழி (இவ்வாறு இவளைப் பற்றி புகழ்ந்துகொண் டிருந்தால் சூரியனுதய மாகி விடும்) என்று சொல்லிக்கொண்டு அல்லியுடன் சேருகின்றான். பின்பு மறு படியும் பாம்புருவ மெடுத்துக் கொள்ளு கின்றான்]

தோ:—அம்மணி! சூரியனுதயமாகி வெகுநேர மாகிவிட்டது. இது நாள்வரை இல்லாத தூக்கம் தூங்கவேண்டிய காரணமென்ன? எழுந்திருங்கள்.

## தோழிகட்கும், அல்லிக்கும் தர்க்கம்

(வண்டுவிழிகண்டு என்ற மெட்டு)

தோ. பொழுதுவிடிந்தது அம்மா தாயே-சும்மா
பூவையேயேன் தூங்குகின்றாய் நீயே

அல். பன்னகம் படமெடுத்து ஆடி-அது
என்னுடன் குலாவினதே சேடி

தோ. ஆடையாபரணமெல்லாம் கோலம்-தாம்
இப்படித் துயிலுவதோ காலம்

அல். அதிகநேரமானதினால் சேடி-நான்
அயர்ந்துதூங்கினேனே என்ன போடி.

அல்:—சேடிகாள்! இப்பாம்புடன் இரவில் நெடுநேரம் விளையாடிக் கொண்டிருந்து விட்டேன். பின் தூங்கினதில் அயர்ந்து விட்டேன் வேறொன்றுமில்லை.

[இது சமயம், பிடாரன் வாசலில் வந்து]

பா-பி:—ஏ அய்மோ அம்மோ! என் பாம்பு கொடுத்திடுங்க அம்மோ,

அல்:—சகிகாள்! வாசலில் பாம்புப் பிடாரன் வந்திருக்கின்றுன் பாம்பைக் கொடுத்துவிடுங்கள். ஏதாகிலும் சொன்னுல் நிறுத்துக் குறைவிற்குப் பொன் கொடுத்து அனுப்பு.

தோழி:—நல்லதம்மணி! அப்படியே.

[பிடாரன் பாம்பை நிறுத்து குறைவிற்குப் பொன் வாங்கிக்கொண்டு போகின்றுன்.]

சீன்-24. இடம்-மதுரை நகரில் ஒரு வீதி.

பாத்திரங்கள்-அர்ச்சுனன், கிருஷ்ணன்.

கிரு:—காண்டீபா! உனதெண்ணம் முடிவாகி விட்டதல்லவா? இனி மேலாவது நமது நகருக்கேகலாம் வா.

அர்ச்சுனன் தரு

(சுஜன ஜீவனு என்ற மெட்டு)

இராகம்-நாடக்குரஞ்சி, தாளம்-ரூபகம்.

பல்லவி

தயைசெய் காரணு இதுசமயம் நாரணு-கண்ணு (த)

அநுபல்லவி

கல்யாணம் மைத்துனு காண்டீபன் சற்குணு
கிருபைசெய்-திரு-வாலவாய் ராணி மணம்புரிந்திட-மாமா (த)

சரணம்

கணையாழி கழற்றிவந்தால் கல்யாண மென்றீர்
அடங்காத தாகந்தணிய ஜலம்வேண்டு மென்றீர்
சகிக்கேனே மாமா இது சம்மதமாமோ
சற்குரு தமிழ் சங்கரலிங்கன் தாள்பணிந்தனன்-மாமா (த)

அர்:—மாமா! எந்தவிதத்திலாவது தடைசொல்லாமல் விவாகஞ் செய்து வைக்கவேண்டும். (நமஸ்காரஞ் செய்கிறுன்)

கிரு:—காண்டீபா! கண்கலங்காதே, யான் மறுபடியும் வனத்தில் மிருகங்களைச் சிருஷ்டித்து குடிகளிட்ட பயிர்களை அழிக்கும்படி செய்து அல்லியை வேட்டைக்கு வரும்படி செய்கின்றேன். வேட்டையாடிக் களைத்து வருவாள். அச்சமயம், நான் ஒரு பிராமணப் பெண்போலவும், நீ ஒரு கிழப்பிராமணுகவும் உருவெடுத்துத் தண்ணீர்ப்பந்தல் வைத்து அல்லியின் தாகத்தைத் தணிப்போம். நம்மை அவளுடன் ஆரண்மனைக்கு அழைத்துப்

போவாள் போனதும் சரியான சமயம்பார்த்து மாங்கல்யஞ் சூட்டி விடுவோம் இதுதான் நல்லயோசனை.

அர்:—கோபாலா! நீர் எப்படிச் சொல்லுகின்றீரோ அப்படிச் செய்ய சித்தமாய் இருக்கின்றேன். எனக்கு, விவாகந்தான் தேவை.

[அல்லி மறுபடியும் வேட்டையாடுகின்றாள்]

சீன்-25. இடம்-கானகம்.

பாத்திரங்கள்-அல்லி, தோழிகள், பிராமணப்பெண், பிராமணக் கிழவன்.

அல்:—சகிகாள்! வேட்டை மிகவும் கடினம், எனக்கோ; தாகம்மேலிடுகின்றது, அதோ காணப்படுகின்ற தண்ணீர்ப்பந்தலில் போய் ஜலங் கொண்டுவாருங்கள்.

தோ:—நல்லது; இதோ போய் ஜலம் கொண்டுவருகின்றோம்.

[போய்க்கொண்டு வருகின்றார்கள்]

அல்:—(தாகம் தீர்ந்தவுடன் தண்ணீர்ப்பந்தலின் சமீபத்தில்சென்று) களைப்புற்று வந்த என் தாகத்தைத் தீர்த்த அம்மணி! நீங்கள் யார்? உங்களுடைய வரலாறு என்ன? விவரமாய்ச் சொல்லுங்கள்.

பி-பெண்:—அம்மணி! என் நாமதேயம் கிருஷ்ணவேணி இவர் என்னுடைய பர்த்தா. அவர் பெயர் காண்டீப அய்யர். புத்திரபாக்கியத்திற்காக காசியாத்திரைச் சென்று வரும் வழியில் எங்கள் குருவின் கட்டளைப்படி பல தானதருமங்கள் செய்து இங்குமொரு தண்ணீர்ப்பந்தல் தருமத்திற் குவைத்தோம்; வேறொன்றுமில்லை.

அல்:—அம்மணி! தாங்கள், தங்கள் நாயகரோடு என தரண்மனையில் சிலநாட் தங்கியிருந்து பிறகு தங்கள் நகருக்குச் செல்லலாமே. வாருங்கள் போகலாம்.

பி-பெ:—நல்லதம்மணி! தங்கள் சித்தம் எனது பாக்கியம்.

[கூடப்போகின்றார்கள்]

சீன்-26. இடம்-அல்லியினரண்மனை.

பாத்திரங்கள்-அல்லி, பிராமணப் பெண், பிராமணக் கிழவன்.

பி-பெ:—அம்மணி! இன்றையதினம் எங்களுக்கு இலக்குமி விரதம் ஆனதினால் தாங்கள் தயை கூர்ந்து தேங்காய், பழம், கற்பூரம்,

குங்குமம் முதலிய விவாக முகூர்த்தத்திற்கு வேண்டிய சாமான்கள் முழுவதும் வேண்டுமம்மணி.

அல்:—நல்லது; நீங்கள் பூஜை மண்டபத்தில்போய் இருங்கள். சாமான்கள் அங்குவந்து சேரும். (போகிறார்கள்) சேடிகாள்! இவர்களுக்கு என்ன தேவையோ அவைகளைக் கொடுக்கும்படி உத்திரவிடுங்கள். எனக்கு இன்றைய ஒருவித மயக்கம் மேலிடுகின்றது. சற்றுநேரம் மஞ்சத்தில் சயனிக்கின்றேன் நீங்கள் சென்று வாருங்கள்.

[இருட்டுவேளை: கிருஷ்ணன் சகாயத்தினால் எல்லோரும் அயர்ந்து தூங்குகின்றார்கள். பூசைமண்டபத்தில் கல்யாணச் சடங்குகள நடக்கின்றது]

கிரு:—அர்ச்சுனா! உனது தந்தையாகிய இந்திரனிடமிருந்து இந்த மாங்கல்யத்தை வரவழைத்தேன்; இதுதான் நல்ல சுபவேளை. சீக்கிரம் இதை அல்லியின்கழுத்தில் கட்டிவிடு; நாம் சீக்கிரம் நமது நகருக்குப் போய்விடுவோம்.

[அர்ச்சுனன் மாங்கல்யத்தை எடுத்துக் கொண்டுபோய் மஞ்சத்தில் நித்திரை புரியும் அல்லியின் கழுத்தில் கட்டுகின்றான்]

அர்:—மாமா! இந்த மாங்கல்யத்தைக் கண்டவுடன் எடுத்து எறிந்து விடுவாள்; ஆகையால், இந்த மாங்கல்யத்தை எந்தெந்த ஆயுதங்களாலும் அறுபடா திருக்கும்படி அநுக்ரகம் செய்யவேண்டும்.

கிரு:—அப்படியே செய்தேன்; சீக்கிரம் வந்துவிடு போய்விடுவோம்.

[அர்ச்சுனன், மாங்கலிய தாரணம் செய்து போகும்சமயம் அல்லிக்கு முத்தம் கொடுத்துப் போகின்றான்]

[விருதுக்கொடியை யறுத்துவிட்டு இருவரும் இந்திரப் பிரஸ்தம் போகின்றார்கள்]

தோ:—(பொழுது விடிந்தவுடன் வந்து) அம்மணி! இது என்ன விபரீதமான மாங்கல்யம் கழுத்தில் கட்டியிருக்கின்றதே. தாங்கள் கவனியாமல் இவ்விதம் அயர்ந்து தூங்குகின்றீர்களே.

அல்:—(அல்லி கழுத்தைப் பார்த்து அதி ஆங்காரக் கோபத்துடன் எழுந்து) ஆஹா! என்ன இது. யாருடைய கள்ளத்தனத்தினாலோ இக்காரியம் செய்திருக்கின்றார்கள். அடி தாதிகாள் இக்காரியம் செய்தவர் யார்? இது ஒரு ஆண்பிள்ளைத் தனமா?

## அல்லி தரு

(ஸ்ரீராமச் சந்திரனே என்ற மெட்டு)

சுட்டி யிருட்டுவேளை கிட்டித் திருட்டுத் தாலி
கட்டி விரு துடைத்துச் சென்றானே
பட்டி முரட்டெருது துஷ்ட நடத்தைக்காகக்
கட்டை கழுத்திலிடுவார் போல
கட்டியேசென்ற மட்டியேயாரு (சுட்)

அல்:—அடி தாதிகாள்! பவளசேனு நீங்கள் எல்லோரும் இங்கு என்ன காவல் புரிந்து வந்தீர்கள். இவ்வேலை செய்த துஷ்டனை யாரென்று தெரிந்து எங்கு சென்றாலும் இக்ஷணமே கொண்டு வாருங்கள்.

தோ:—நல்லதம்மணி! (தேடிப்பார்த்து) அம்மணி! இம்மதுரை பட்டணமெங்கும் தேடிப் பார்த்தோம் யாரும் தென்படவில்லை. யார் செய்தது என்றும் புலப்படவில்லை.

அல்:—நல்லது; நாம் அழைத்துவந்த அந்தப் பிராமணப் பெண்ணும் கிழவனையும் பார்த்து வா.

தோ:—(போய்ப் பார்த்து) அம்மணி! அவர்களையும் காணவில்லையே. அவர்கள்தான் செய்திருக்கலாம் என்று எனக்குத் தோன்றுகிறது.

அல்:—நல்லது; பவளசேனு இது யாரோ அரசர்களின் கபடமாக இருக்கலாம்; ஆனதினால், ஒவ்வொரு அரசர்களுக்கும் நிருபம் எழுதித் தருவித்து, விஷயத்தைச் சொல்லி நெய்க் கொப்பரையில் நெய்யைக் காயவைத்து அதில் கையைவைத்துச் சத்தியம் செய்து, பக்கத்திலிருக்கும் நெல்லைக் கசக்கி அரிசியாக்க வேண்டும், என்று தெரிவிப்பாய் சீக்கிரம்.

[ஒவ்வொரு அரசர்களும் சத்தியம்செய்து போகின்றார்கள்]

(கிருஷ்ணமூர்த்தி சத்தியம் செய்தபின்)

பீமன்:—பரந்தாமா! இதோ யானும் சத்தியம் செய்கிறேன் என்னைச் சற்று கவனியுங்கள். (கிருஷ்ணன் பீமனுக்குக் கண்சாடை செய்தவுடன்) பீமன் நெய்யைக் குடித்துவிட்டுக் கொப்பரையைக் காலால் உதைத்து உருட்டிச் செல்கின்றான்.

பவளசேனு:—அம்மணி! இந்திரபிரஸ்தர்களும் தர்மராஜனின் சகோதரனுமான பீமராஜர், நெய்யை எல்லாம குடித்துவிட்டுக் கொப்பரையையும் உருட்டிச் சென்றுவிட்டார்.

அல்:—(அதிகக் கோபத்துடன்) பவளசேனு! இப்பொழுது நமது சேனு! சைன்யங்களைத் தயார்செய் உடனே போய் அவர்கள் வம்சமே இல்லாமற் கருவறுத்து விடலாம் சீக்கிரம் தாமதியாதேயுங்கள்.

[அல்லி படையுடன், இந்திர பிரஸ்தம் செல்கின்றாள்]

சீன்-27. இடம்:—அஸ்தினுபுரம்.

பாத்திரங்கள்-அல்லி, அல்லியின் சேனைகள், அர்ச்சுனன், சகாதேவன், கிருஷ்ணன், பீமன், நகுலன், முதலியோர்கள்.

[மற்றவர்கள் யுத்தஞ்செய்து ஓட்ட மெடுத்தபின் சகாதேவன் தர்மர் கிருஷ்ணனிடம் விடைபெற்று அல்லியுடன், யுத்தத்திற்கு வருகின்றான்]

புலிக்கூண்டு

சகா:—நான்; சாஸ்திரங்களை ஆராச்சி செய்துபார்த்ததில், அல்லியென்பவள் சதாரணப் பெண் அல்ல. இவள் ஸ்ரீ மீனும்பிகை சுந்தரேஸ்வரர் கடாக்ஷத்தினுல் உதித்தவள் என்றும், இவளை நேரில்நின்று ஜெயிப்பதற்கு முடியாதென்றும் தெரிந்தேன். முன்பு யுத்தத்திற்குப் போனவர்களின் செயலை யோசித்தால், கிருஷ்ணனே மானம்போனுலும் போகட்டுமென்று உயிர்தப்பி ஓடினுர்; என்றால், பீமண்ணு விஷயம் பேசவேண்டியதே இல்லை. ஆனதினுல் என் புத்திக் கூர்மையினுல் புலிக்கூண்டு ஒன்று கொண்டுவந் திருக்கின்றேன். அக்கூண்டில் தந்திரமாய் அடைத்து விடுகின்றேன். இதுதான் நல்ல யோசனை.

[சமீபத்தில் சென்று]

சகா:—அண்ணியரே அடியேன் நமஸ்காரம்.

அல்:—பாரடா அவன், மடப்பயல் என்னை அண்ணியென் றழைகிறவன்.

சகா:—அண்ணியரே! யான் தான் உனது சிறிய மைத்துனன் சகாதேவன். சற்று நிதானியுங்கள். அவசரப் படவேண்டாம். பெண்புத்தி பின்புத்தி என்று, நினைத்து யோசியாமல் உன்னோடு யுத்தம் செய்யக்கூடாது என்று, உனக்குச் சாஸ்திர முறைகளை எடுத்துக் கூறுகின்றேன். எனது சகோதரர்கள் புறங்காட்டி ஓடிவிட்டார்க ளென்று கெர்வங் கொள்ளாதே. தற்சமயம் உன்னை சில கேள்விகள் கேட்டுப் பின்போர் துடங்கலாம் என்ற யோசனை. உன் அபிப்பிராய மென்ன?

அல்:—அடே, நீதானு சாஸ்திரமுறை யறிந்த சகாதேவன், நீ யுத்தத்திற்கு வந்தவனு? நியாயம் பேச வந்தவனு? படுகளத்தில் ஒப்பாரி என்னடா, நில் யுத்தத்திற்கு உன் சாமார்த்தியத்தை அறிகின்றேன்.

சகா:—அண்ணியாரே! வீணுகக் கெட்டுப்போகாதே நீயோ ராஜமுறையை மநுதர்ம முறைப்படி ஆராய்ந் தரிந்து நடந்திருக்கலாம்; ஆனதினுல், சற்று சாஸ்திர விதியைக் கவனித்து நட. படுகளத்தில் ஒப்பாரியா என்று, உன் பெண் புத்தியைக் காட்டாதே. சிற்றுளியால் கல்லும் தகரும் என்ற முதுமொழியைக் கவனி.

அல்:—அடா மடப்பயலே! யுத்தத்திற்கு வந்தவனுக்கு வீண் வார்த்தை எதற்கடா நடத்து யுத்தத்தை.

சகா:—நல்லது; இவளோடு தனித்துப் பேசுவதில் பயனில்லை, எதிரிலிருக்கும் கூண்டையுடை த்து விட்டுப் பார்க்கலாம். நல்லது; உனது கைவரிசையை எல்லாம் காட்டு.

[யுத்தம் நடக்கிறது.]

## சகாதேவனுக்கும், அல்லிக்கும் யுத்தம்

(சாரங்கந்தனிலே என்றமெட்டு)

இராகம்-அடாணு, தாளம்-ஏகம்.

### தரு

சகா. அண்ணியே நீரெம்பத் துடிதுடிப்பது மேனே-உன்
வீரத்தனத்தை யான் வீணடிக்காது போவேனே
அம்பைத் தொடுத்ததி வேகமுடனே யான்
விடுப்பேன் கணை சரமாரியாய்த்
தொடுப்பேனிங்கு பதில் சொல்லடி (அண்)

அல். சின்னஞ்சிறுவனே உந்தன் தமையன்மார் வந்து-இங்கே
மான மழிந்துமதி கெட்டுப்போனுரே நொந்து
நாலாவிதத்திலும் நசுக்கியே கொல்லுவேன்
நியாயத்துடன் நீ வந்தனை
பேயித்தினம்மனை செல்லடா (சின்)

சகா. தமையன் மனைவியைத் தாயென்று யானுமேயெண்ணி-நான்
தந்தேன் மரியாதை யோசித்திடு மெந்தனண்ணி
வலையி லகப்பட்ட மீனதைப் போலவே

மீறித் தினம்மதி கெட்டுமே
பாரித் தினங்கணை பூட்டினேன் (அண்)

பொ:—என்று பாடிக்கொண்டே சகாதேவன் பயந்து ஓடுகிறவன் போல் ஓடி புலிக்கூண்டிற்குள் நுழைய அல்லியும் அவனோடு பின் தொடர்ந்து நுழைய சகாதேவன் வெளிவந்ததும் கதவை மூடிவிடுகின்றான்.

அல்:—அடே! பொடிப்பயலே, நீதிசாஸ்திர மறிந்த நிர்மூடா இதுவோ, ஆண்பிள்ளைத் தனம் சீ போடா மடையா.

அர்:—(இச்சமயம் அர்ச்சுனன் வருகின்றான்) கூண்டிலிருக்கும் அல்லியைப் பார்த்து.

(பூமிமெச்சிடும் என்ற காவடிச்சிந்து மெட்டு)

இராகம்-கமாசு, தாளம்-சாப்பு.

### கண்ணிகள்

அர். அல்லியென்றியம்பிடும் மெல்லியாளே யிது
என்னடி-மாலைசூட்டி வந்தவனும் யானடி
உந்தனாண்மைத்தனமது கூடவே கூடாது
தேறடி-பதில் கூறடி

அல். சினமேவந்திடும்

அர். வந்தாலென்னடி

அல். வருங்கேடடா

அர். கேடுயாருக்கு

அல். பாரோர் கேலிசெய்யக் கள்ளத்தாலிகட்டி
வந்தகடையனே சுத்த மடையனே

[கூண்டினுள் இருக்கும் அல்லிக்குக் கிருஷ்ணபகவான் ஆதிமுதல் நடந்த விஷயத்தைச் சொல்லி சமாதானஞ் செய்து அல்லியிடம் பஞ்சபாண்டவர்களுக்குக் கெடுதி செய்யவில்லை என்று சத்தியஞ்செய்து கையிலிருந்த வாளை வாங்கிக்கொண்டு, சகாதேவன் கூண்டைத்திறந்து வெளியில் விடுகின்றான்.]

[எல்லோரும் பரந்தாமனாகிய கண்ணபிரானை துதிக்கின்றார்கள்.]

## மங்களம்

பாரெங்கும் புகழ்பெரு சரபம்
பழனிப்பதி மாம்பழ சரபம்
பேர்தங்கும் கனிமலர் சரபம்
பேசுந்தமிழ் மழைபொழி சரபம் (பா)

நிலவும் புகளிந்திய பூமி
நேசந்தரு மதுரித நாமி
குலவும்பல நாடக நேமி
குருவேயுடு மலைமுத்துச் சாமி (பா)

கியானம்பெரு மாரிய பாலர்
ஞானச்சபை மேவிய சீலர்
தியானம்புரி சங்கர லிங்கம்
தனதோர் குருவாக விளங்கும் (எனது குருமொழி)

சுபம்! சுபம்!! சுபம்!!!

முற்றுப் பெற்றன.

68053

O-, 2mKP, A
N32

திருமகள்விலாசம் பிரஸ், சென்னை;—1932.

## வடுவூர். K. துரைசாமி ஐயங்கார் எழுதிய

### இனிய தமிழ் நாவல்கள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1. | பூர்ணசந்திரோதயம் | 4-பாகம் .... .... | 7 | 8 | 0 |
| 2. | மதனகல்யாணி | 3 ,, .... .... | 4 | 8 | 0 |
| 3. | சௌந்தரகோகிலம் | 3 ,, .... .... | 6 | 0 | 0 |
| 4. | கும்பகோணம் வக்கீல் | 2 ,, .... .... | 3 | 0 | 0 |
| 5. | திகம்பரசாமியார் பாலிய லீலை | 2 ,, .... .... | 5 | 0 | 0 |
| 6. | மாயாவினோதப்பரதேசி | 2 ,, .... .... | 5 | 0 | 0 |
| 7. | மேனகா | 2 ,, .... .... | 3 | 0 | 0 |
| 8. | பாலாமணி | .... .... .... .... | 2 | 8 | 0 |
| 9. | வசந்தமல்லிகா | .... .... .... .... | 1 | 8 | 0 |
| 10. | வித்தியாசாகரம் | .... .... .... .... | 1 | 4 | 0 |
| 11. | திவான் லொடபடசிங் | .... .... .... .... | 0 | 12 | 0 |
| 12. | திலோத்தமா | .... .... .... .... | 0 | 12 | 0 |
| 13. | மாணிக்கவாசகர் | .... .... .... .... | 0 | 8 | 0 |

மதுரை

## K. குற்றாலம்பிள்ளை அவர்களியற்றிய

### டிராமா சரித்திரங்கள்

| | | | | |
|---|---|---|---|---|
| ஞானசௌந்தரி | ... ... ... | 0 | 4 | 0 |
| கோவிலன் | ... ... ... | 0 | 6 | 0 |
| அரிச்சந்திரா | ... ... ... | 0 | 4 | 0 |
| வள்ளிதிருமணம் | ... ... ... | 0 | 4 | 0 |
| நந்தனார் | ... ... ... | 0 | 4 | 0 |
| பவளக்கொடி | ... ... ... | 0 | 4 | 0 |
| சாரங்கதரா | ... ... ... | 0 | 4 | 0 |
| சகுந்தல | ... ... ... | 0 | 4 | 0 |
| காலவரிஷி | ... ... ... | 0 | 4 | 0 |
| காளிதாஸ் | ... ... ... | 0 | 4 | 0 |
| கபீர்தாஸ் | ... ... ... | 0 | 4 | 0 |
| சம்பூர்ண இராமாயணம் 12-பாகங்களடங்கியது | | 2 | 0 | 0 |
| (தி. நாராயணசாமி பிள்ளை கம்பெனியில் நடத்தியது) | | | | |
| (ஷை கம்பெனி) லவகுச ... | ... ... | 0 | 4 | 0 |

B. இரத்தின நாயகர் ஸன்ஸ்,

நெ. 41, வெங்கடராமய்யர் தெரு, மின்ட்பில்டிங் போஸ்டு, சென்னை.